246

Tamil Text for Eng. S. S. C. 1947—1948

# நளவெண்பா — சுயம்வரகாண்டம்
# 1 — 55 செய்யுள்

உரை, ஆசிரியர் வரலாறு, நளன் சரிதம்
முதலியவற்றுடன்

0420

சுன்னாகம்:
வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தாரால்
வெளியிடப்பட்டது

Copy-right] 1946 [விலை சதம் 50

ஓம்

புகழேந்திப் புலவர்

இயற்றிய

# நளவெண்பா

## சுயம்வரகாண்டம் 1—55 செய்யுள்

(உரையுடன்)

சுன்னுகம் :

வட - இலங்கைத் தமிழ்நூற்பதிப்பகம்

பதிப்புரிமை ]

[ 1946

# நளவெண்பா

## சுயம்வரகாண்டம் 1—55 செய்யுள்

### பொருளடக்கம்


1. பதிப்புரை
2. நூலாசிரியர் வரலாறு
3. நளன் சரிதம்
4. சுயம்வரகாண்டம் 1 — 55
5. உரைப்பகுதி


# பதிப்புரை

நளவெண்பா என்பது, நிடதநாட்டிலிருந்து செங்கோலோச்சிய நளச் சக்கரவர்த்தியின் சரித்திரத்தைக் கூறும் செந்தமிழ்ச் சிறுகாப்பியமாகும். இதனைத் தமிழ் நலங் கனியுமாறு இனிய வெண்பாக்களால் இயற்றியவர், பன்னிரண்டாம் நூற்றாண்டில் விளங்கிய புகழேந்திப் புலவராவர். பன்னிரண்டாம் நூற்றாண்டின் முன்னர், நளன் கதையினைக் கூறும் தமிழ் நூல்கள் இருந்தனவென்பதற்குச் சான்றுகள் இலவெனினும் 2000 ஆண்டுகளுக்கு முன், சங்ககாலத்திருந்த தமிழ் மக்களால் நளன் வரலாறு நன்கறியப்பட்டிருந்ததென்பது,

> "வல்லா டாயத்து மண்ணரசு இழந்து
> மெல்லியல் தன்னுடன் வெங்கா னடைந்தோன்"

என்று இளங்கோவடிகள் கூறுமாற்றான் அறியக்கிடக்கின்றது.

இச்சரிதம், பாண்டவருள் முன்னவனாகிய தருமராசனுக்கு வியாசமுனிவன் எடுத்தியம்பிய மகாபாரதக் கிளைக் கதைகளுள் ஒன்றாகும். கி. பி. 1564-ம் ஆண்டு சிங்காசன மேறிய "கொற்கையாளி" அதிவீரராமபாண்டியர், கவிச்சுவை ததும்புமாறு இயற்றிய நைடதம் என்னும் காப்பியமும், நல்லாப்பிள்ளை பாரதத்தமைந்துள்ள கிளைக்கதையும், "நைடதக் கலித்துறை" என்னும் நூலும் நளன் கதையைக் கூறும் தமிழ்ச் செய்யுணூல்களாம்.

நளன் கதையை வடமொழியில் உரைக்கும் நூல்கள் மகாபாரதத்து ஆரணிய பர்வத்துள்வரும் "நளோபாக்கியான"மும், ஸ்ரீ ஹர்ஷன் இயற்றிய "நைஷதமும்", மகாகவி காளிதாசனால் இயற்றப்பட்டதெனப்படும்) "நளோதயம்" என்னும் நூலுமாம்.

நளன் கதையை வடமொழியிற் படித்தின்புற்ற ஆங்கிலப் புலவர் ஒருவர், "அக்கதை வனப்புடையதும், பல்சுவையும் பொருந்தியதும், உள்ளத்தைக் கவரும் பான்மையது" மெனக் கூறியுள்ளார். இவ்வினிய கதையினைப் பொருட்சுவையும், சொல்வனப்பும், இசையின்பமுஞ் செறியுமாறு தமிழுலகத்துக்கு அளித்த புலவர்திலகர், பாவிற் சிறந்த வெண்பாவினால் யாத்து "வெண்பாவிற் புகழேந்தி" என்னும் சிறப்புப் பெறுவாராயினர்.

இந்நூல், சுயம்வரகாண்டம், கலிதொடர்காண்டம், கலிநீங்கு காண்டம் என்னும் மூன்று காண்டங்களையுடையது.

அவற்றுள், முதற்காண்டமாய சுயம்வரகாண்டத்தின் முதலிலுள்ள ஐம்பத்தைந்து வெண்பாக்களை, கலாசாலைமாணவர்க்கும் பயன்படுமாறு வெளியிடுகின்றோம். நூலாசிரியர் வரலாறு, நளன் சரிதம், செய்யுட்களுக்கு உரைப்பகுதி என்னும் இவற்றையும் படிப்போர்க்குப் பயன் பெறுமெனக் கருதிச் சேர்த்திருக்கின்றோம்.

இத்தகைய நூல்களை வெளியிடும் முயற்சியில் எம்மை மேன்மேலும் ஊக்கப்படுத்துமாறு வித்தியாபிமானிகளை வேண்டுகின்றோம்.

வ. இ. தமிழ்நூற்பதிப்பகத்தார்.

# நூலாசிரியர் வரலாறு

புகழேந்திப் புலவர், தொண்டை மண்டலத்திலே செங்கற்பட்டென வழங்கும் செங்கழுநீர்ப்பட்டிக்கு அண்மைக்கண்ணுள்ள பொன்விளைந்த களத்தூரிற் பிறந்தனர். இவர் விளங்கிய காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டென்பர். இவர் துளுவ வேளாள மரபினர்; வைணவ மதத்தினர். இவர் இயற்றிய நூல்கள் நளவெண்பாவும், இரத்னச்சுருக்கமும். இவர் பாடியதாக வழங்கப்படும் தனிப்பாடல்களும் பலவுள.

அவற்றுள், கொழும்பு ஆரோதன் மைந்தன்மீது உரைத்ததென வழங்கும் [1] "கயற்காவிநாறுங் கொழும்பிற் பிரசண்டா" என்னும் விருத்தத்தானும், கதிர்காம வேலர்முன் பாம்பை மயில்விடப் பாடியதென வழங்கும் [2] "தாயரவை முன் வருத்தும்" என்னும் வெண்பாவானும் (இவை புகழேந்தியார் பாடல்களெனின்) புகழேந்திப்புலவர் ஈழமண்டலத்துக்கும் வந்துள்ளார் என்பது புலப்படுகின்றது. அன்றியும், புகழேந்திப் புலவருக்கு ஆயிரம் பொன்னும் யானையும் பரிசிலாக

---

1 கயற்காவி நாறும் கொழும்பிற் பிரசண்டா
காரார் கொடைச் செங்கை ஆரோதன் மைந்தா
இயக்காநின் மார்பிற் செழும்புன்னை யந்தார்
இப்போது நீநல்கி லென்பேதை தன்மேற்
சயக்காம வேளம்பு தைக்காது முத்தின்
றமஞ் சுடாசந் தனம்பூசி னாலும்
தீயக்காது வேயுஞ் செவிக்கும் பொறுக்குந்
தீயென்று மூளாது திங்கட் கொழுந்தே.

2 தாயரவை முன்வருத்துஞ் சந்த்ரோ தயந்தனக்குன்
வாயரவை விட்டுவிட மாட்டாயோ — தீயரவைச்
சீறு மயிற்பெருமாள் தென்கதிர்கா மப்பெருமாள்
ஏறு மயிற்பெருமா ளே.

அளித்த [1] "சிங்கையாரியசேகரன்" யாழ்ப்பாணத்திலிருந்து அரசு புரிந்த மன்னருள் ஒருவராதல் கூடும். ஆரிய சேகரன் இறந்தது கேட்டு விசனமுற்றுரைத்த [2] "ஆகாவிதியோ" என்னும் வெண்பாவால், புகழேந்திப்புலவர் காலத்திலேயே ஆரியசேகரன் விண்ணுல கெய்தினன் என்று அறியக்கிடக்கின்றது; இவை இன்னும் ஆராய்ந்து துணிதற்குரியன.

"அல்லியரசாணிமாலை", "புலந்திரன் களவுமாலை" முதலிய நூல்களையும் இவரே இயற்றினார் என்றும் ஒரு சிலர் கூறுவர். இக் கூற்றுக்கும் "ஒட்டக்கூத்தர் இவரைச் சிறைப் படுத்துவித்தார்; சோழராசன் மனைவியார் (பாண்டியன் மகள்) இவரைச் சிறைநீக்குவித்தார்" என்னும் இன்னோரன்ன நிகழ்ச்சிகளுக்கும் கன்னபரம்பரைக் கதைகளையன்றி வேறாதாரங்களில்லை. கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தியார், ஔவையார் என்னும் நால்வரும் ஒரே காலத்தவர் என்னுங் கொள்கையும் ஆராய்ச்சிக்குரியதே.

பாவிற் சிறந்த வெண்பாவால் யாக்கப்பெற்ற நூல்களிற் றலைசிறந்து விளங்கும் நளவெண்பாவினை இயற்றிய பெருமையொன்றே, இவர் புலவர் திலகர் என்பதற்குச் சிறந்த சான்றாகும். தமிழ்ப்புலவர்களின் உண்மை வரலாறுகளை ஆராய்ந்து வெளியிடல் தமிழ்மக்களைப் பொறுத்த பெருங் கடனாகும்.

---

1 பாவலன் வாசலில் வந்திபம் வாங்கப் படிபுரக்கும்
காவல னிந்தும் படிவைத்த வன்கண்டி யொன்பதினும்
மேவலர் மார்பினுந் தீண்டோ ளினுஞ்செம்பொன் மேருவினும்
சேவகங் கோட்டிய மால்சிங்கை யாரிய சேகரனே.

2 ஆகா விதியோ வடலா ரியர்கோமான்
ஏகா வலனற் றழிந்தநாள் — ஓகோ
தருக்கண்ணி லுங்குளிர்ந்த தண்ணளிதந் தாண்ட
திருக்கண்ணி லுஞ்சுடுமே தீ.

# நளன் சரிதம்

பல்வளங்களும் செறிந்த நிடதநாட்டரசனாகிய நளன், விதர்ப்பநாட்டரசனாகிய வீமன் புதல்வி "கன்னலஞ் சுவை கனிந்த சொற் றமயந்தி என்னும் பொன்னனங் கொம்பனா"ளுடைய கற்பு, பொற்பு முதலியவற்றைப் பலபடி பலர் புகழக் கேட்டு, அவள்பாற் காதல்கொண்டிருந்தான். அவளும் "செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான்; அருளின துறையுள்; நல்லறத்தின் வேலி; சொற்றெருளுறு கல்வியந் தெய்வமாக்கடல்; குரைகடற் புவிபுகழ் குணக்குன்றம்" எனப் புகழ்ந்தேத்தப்படும் நளன்பாற் காதல் கொண்டிருந்தாள்.

"மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார்முரசம் எங்கும் அறைக" என்று விதர்ப்பர்கோன் தூதரைப் பல தேசங்களுக்கும் அனுப்பினான். நளமகாராசனும், மற்றும் வேந்தரும், இந்திரன், வருணன் முதலியோரும் சுயம்வரத்திற்கு வந்திருந்தனர். 'அழகு சுமந்திளைத்த ஆகத்தா'ளாகிய தமயந்தி 'பொறையெனும் புவிக்குத் தானோர் பொறையனா யுயிர்களோம்பும்' நளனுக்கே மாலை சூட்டினாள்.

திருமணம் நிறைவெய்திய பின்னர், நளனுந் தமயந்தியும் நிடதநாடேகி மாவிந்த நகரத்திலிருந்து செங்கோலோச்சி வருநாளில், நளன் புட்கரனுடன் சூதாடி நாடு முதலிய எல்லாவற்றையும் பணயமாக வைத்துத் தோற்றனன்; தோற்ற பின்னர் நளன் மக்கள் இருவரையும் வீமன்பால் விடுத்துத் தமயந்தியோடு நாடகன்று காடு புக்கனன்.

காட்டகத்துள்ள பாழ் மண்டபம் ஒன்றில் உறங்குகையில், நளன் தமயந்தியை நீத்தகன்றான்; உறக்கம் நீங்கிய தமயந்தி நளனைக் காணாது வருந்திப் புலம்பிச் சேதிநா

..டைந்து, அங்கு நின்றும் விதர்ப்பநாடு போந்து தந்தைபா லிருந்தாள்.

தமயந்தியை விட்டுநீங்கிய நளன், தீவாய்ப்பட்ட கார்க்கோடகனை, அவன் வேண்டியவாறு எடுத்துப் புறத்தே விட்டுப் பின் அவனால் தீண்டப்பட்டு வேற்றுருவடைந்து சென்று, அயோத்தி மன்னன்பால் மடைத்தொழிலும் தேர்த்தொழிலுஞ் செய்ய அமர்ந்திருந்தான்.

தமயந்தியின் விருப்பின்படி நளனை நாடிச்சென்று திரும்பி வந்த அந்தணன் ஒருவன், நளன் அயோத்தியில் இருப்பதை உய்த்துணர்ந்து தமயந்திக்கு அறிவித்தலும் அவள், 'தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம்' என்று அயோத்தி மன்னற்கு ஓலை போக்குவித்தாள்; அம் மன்னன் தன் தேர்ப்பாகனாகிய நளனுடன் வருதலும் தமயந்தி வேற்றுருவடைந்தவன் நளனென வுணர்ந்து தந்தைக்கறிவித்தனள்; வீமன் விரும்பியவாறு நளனும் கார்க்கோடகனளித்த ஆடையைத் தரித்துச் சுயரூபம் பெற்றான்.

நளன் பின்னாட் குண்டினபுரத்திலிருந்து பின் தமயந்தியுடனும் மக்களுடனும் நிடதநாடுசென்று புட்கரனுடன் மறுசூதாடி வெற்றியடைந்து மாவிந்த நகரத்திலிருந்து செங்கோலோச்சி வருவானாயினான்.

# சுயம்வர காண்டம்

## நூல் வரலாறு

[நாடிழந்த தருமபுத்திரர் வனத்தில் வருந்தி இருந்தல்]

1. பாண்டவரின் முன்தோன்றல் பார்முழுதுந் தோற்றொருநாள்
ஆண்டகையே தூதுவனாய்ச் சென்றவனி — வேண்ட
மறுத்தான் இருந்தானை மண்ணொடும்போய் மாளப்
பொறுத்தான் இருந்தான் புலர்ந்து.

[வருந்தியிருந்த தருமபுத்திரனை அரசர்கள் கண்டு அளவளாவுதல்]

2. நாட்டின்கண் வாழ்வைத் துறந்துபோய் நான்மறையோர்
ஈட்டங்கள் சூழ இருந்தானைக் — காட்டில்
பெருந்தகையைக் கண்டார்கள் பேரெழிற்றோள் வேந்தர்
வருந்தகைய ரெல்லாரும் வந்து.

[வியாச முனிவர் தருமபுத்திரனைச் சந்தித்தல்]

3. கோற்றவேற் றானைக் குருநாடன் பாலணைந்தான்
ஏற்றுநீர் ஞாலத் திருணீங்க — முற்றும்
வழிமுறையே வந்த மறையெல்லாந் தந்தான்
மொழிமுறையே கோத்த முனி.

[தருமர் வியாசர் வருகையால் மகிழ்ந்துபசரித்தல்]

4. மறைமுதல்வ நீயிங்கே வந்தருளப் பெற்றேன்
பிறவிப் பெருந்துயர மெல்லாம் — அறவே
பிழைத்தேன்யா னென்றானப் பேராழி யானை
அழைத்தேவல் கொண்ட அரசு.

[வியாசர் தருமனை வாடி இருந்தமைக்குக் காரணம் என்னெனல்]

5. பேய்த்திருவந் தாற்றாலும் வெந்துயர்வந் துற்றாலும்
ஒத்திருக்கு முள்ளத் துரவோனே — சித்தம்
வருந்தியவா றென்னென்றான் மாமறையா னுள்ளம்
திருந்தியவா மெய்த்தவத்தோன் தேர்ந்து.

[ தருமபுத்திரன் தன்வருத்தத்திற்குக் காரணங் கூறல் ]

6. அம்பொற் கயிலைக்கே யாகத் தரவணிவார்
தம்பொற் படைக்குத் தமியனா — எம்பியைமுன்
போக்கினே னென்றுரைத்தான் பூதலத்து மீதலத்தும்
வாக்கினே ரில்லாத மன்.

[ வியாசர் தருமனை நோக்கி வருந்தவேண்டாமெனல் ]

7. காண்டா வனந்தீக் கடவுளுணக் கைக்கணையால்
நீண்ட முகிறடுத்து நின்றாற்கு — மீண்டமரர்
தாளிரண்டு நோவத் தனித்தனியே ஓடியநாள்
தோளிரண்டு மன்றோ துணை.

[ தருமன் முனிவரிடம் தான் நாடிழந்துகாடுபுகக் காரணம் என்னெனல்

8. பேரரசு மெங்கள் பெருந்திருவுங் கைவிட்டுச்
சேர்வரிய வெங்கானஞ் சேர்தற்குக் — காரணந்தான்
யாதோவப் பாவென்றா னென்றுந்தன் வெண்குடைக்கீழ்த்
தீதோவப் பார்காத்த சேய்.

[ வியாசர் தருமபுத்திரனுக்கு விடைகூறித் தேற்றல் ]

9. கேடில் விழுச்செல்வங் கேடெய்து சூதாடல்
எடவிழ்தார் மன்னர்க் கியல்பேகாண் — வாடிக்
கலங்கலைநீ என்றுரைத்தான் காமருவு நாடற்
கிலங்கலைநூன் மார்ப னெடுத்து.

[ தருமபுத்திரன் முனிவரிடம் “என்போல் சூதாடி நாடிழந்து வருந்தியவருளரோ” என வினவுதல் ]

10. கண்ணிழந்து மாயக் கவறாடிக் காவலர்தாம்
மண்ணிழந்து போந்து வனம்நண்ணி — விண்ணிழந்த
மின்போலு நூன்மார்ப மேதினியில் வேறுண்டோ
என்போ லுழந்தா ரிடர்.

[ சூதாட்டத்தால் நாடிழந்த நளன் கதையை வியாசர் சொல்லத் தொடங்குதல் ]

11. சேமவேன் மன்னனுக்குச் செப்புவான் செந்தனிக்கோல்
நாமவேற் காளை நளனென்பான் — யாமத்



தொலியாழி வைய மொருங்கிழப்பப் பண்டு
கலியால் விளைந்த கதை.

[ நிடதநாட்டுச் சிறப்பு ]

12. காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் றளையவிழப் — பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு.

[ இது முதல் ஐந்து பாட்டால் நகரச் சிறப்புக் கூறுகிறார் ]

13. கோதை மடவார்தங் கொங்கை மிசைத் திமிர்ந்த
சீத களபச் செழுஞ்சேற்றால் — வீதிவாய்
மானக் கரிவழுக்கு மாவிந்தம் என்பதோர்
ஞானக் கலைவாழ் நகர்.

14. நின்று புயல்வானம் பொழிந்த நெடுந்தாரை
என்று மகில்கமழு மென்பரால் — தென்றல்
அலர்த்துங் கொடிமாடத் தாயிழையா ரைம்பால்
புலர்த்தும் புகைவான் புகுந்து.

15. வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன — கஞ்சங்
கலங்குவன மாளிகைமேற் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு.

16. தெரிவனநூ லென்றுந் தெரியா தனவும்
வரிவளையார் தங்கண் மருங்கே — ஒருபொழுதும்
இல்லா தனவு மிரவே இகழ்ந் தெவருங்
கல்லா தனவுங் கரவு.

17. மாமனுநூல் வாழ வருசந்திரன் சுவர்க்கி
தாமரையாள் வைகுந் தடந்தோளான் — காமருபூந்
தாரான் முரணைநகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி.

18. ஓடாத தானை நளனென் றுளனொருவன்
பீடாருஞ் செல்வப் பெடைவண்டோ — டூடா
முருகுடைய மாதர் முகநனைக்குந் தண்டா
ரருகுடையான் வெண்குடையா னாங்கு.

[நளனது செங்கோற் சிறப்பு]

19. சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் றனிக்காத்தான் — மாத
ரருகூட்டும் பைங்கிளியு மாடற் பருந்து
மொருகூட்டில் வாழ வுலகு.

[நளன் சோலை புகுதல்]

20. வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான் — தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்து நீர்நாடன்
பூநாடிச் சோலை புக.

[வசந்தகால வருகை]

21. வென்றி மதவேடன் வில்லெடுப்ப வீதியெல்லாம்
தென்றன் மதுநீர் தெளித்துவர — நின்ற
தளவேனன் மீதலருந் தாழ்வரைசூழ் நாடற்
கிளவேனில் வந்த தெதிர்.

[நளன் பூஞ்சோலை யடைதல்]

22. தேரிற் றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனனனைப்ப வேயடைந்தான் — கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலும் தாங்கிருள்வெய் யோற்கொதுங்கிப்
புக்கிருந்தா லன்ன பொழில்.

[நளன் அங்கே ஒரு அன்னப் பறவையைக் காணல்]

23. நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
ருணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப — மாணிறத்தான்
முன்னப்புட் டோன்று முளரித்தலை வைகு
மன்னப்புட் டோன்றிற்றே யாங்கு.



[அரசன் பரிசாரிகைப் பெண்ணிடத்து அன்னத்தைப் பிடித்துத் தரச் சொல்லுதல்]

24. பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமன்
மேதிக் குலமேறி மென்கரும்பைக் — கோதிக்
கடித்துத்தான் முத்துமிழும் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா வென்றான் பெயர்ந்து.

[பெண்கள் அரசன் கட்டளைப்படி அன்னத்தைப் பிடித்துக் கொணர்தல்]

25. நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழா
மோடி வளைக்கின்ற தொப்பவே — நீடியநற்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து.

[அப்பொழுது அன்னங் கலங்குதல்]

26. அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் றிருமுன்னர் வைத்தலுமே — யன்ன
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

[அரசன் அன்னத்துக்குத் தேறுதல் மொழி கூறல்]

27. அஞ்சன் மடவனமே யுன்ற னணிநடையும்
வஞ்சியனையார் மணிநடையும் — விஞ்சியது
காணப் பிடித்ததுகா ணென்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

[அன்னம் கலக்கம் ஒழிதல்]

28. செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம் — வெய்ய
அடுமாற்ற மில்லா வரசன் சொற்கேட்டுத்
தடுமாற்றந் தீர்ந்ததே தான்.

[ அன்னம் நளனுக்குத் தமயந்தி தக்கவளெனல் ]

29. திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே யுன்ற
னிசைமுகந்த தோளுக் கிசைவாள் — வசையி
றமயந்தி யென்றோதுந் தையலாண் மென்றோ
ளமயந்தி யென்றோ ரணங்கு.

[ நளன் தமயந்தியிடத்து ஆசைகொள்ளுதல் ]

30. அன்ன மொழிந்த மொழிபுகா முன்புக்குக்
கன்னி மனக்கோயில் கைக்கொள்ளச் — சொன்னமயி
லார்மடந்தை யென்று னநங்கன் சிலைவளைப்பப்
பார்மடந்தை கோமான் பதைத்து.

[ அன்னம் தமயந்தியின் வரலாற்றைக் கூறுதல் ]

31. எழுவடுதோண் மன்னு விலங்கிழையோர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை — யுழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயு மாடொலிநீர் நாடன்
கொடை விதர்ப்பன் பெற்றதோர் கொம்பு.

32. நாற்குணமும் நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
வார்க்குஞ் சிலம்பே யணிமுரசா — வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீ
ழாளுமே பெண்மை யரசு.

33 மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டா திடையென்று வாய்விட்டு — நாட்டே
னலம்புவார் கோதை யடியிணையில் வீழ்ந்து
புலம்புமா நூபுரங்கள் பூண்டு.

34. என்று நுடங்கு மிடையென்ப வேழுலகு
நின்ற கவிதை நிழல்வேந்தே — யொன்றி
யறுகாற் சிறுபறவை யஞ்சிறகால் வீசுஞ்
சிறுகாற்றுக் காற்றாது தேய்ந்து.



35. சேந்தேன் மொழியாள் செறியழக பந்தியின்கீழ்
இந்து முறியென் றியம்புவார் — வந்தென்றும்
பூவாளி வேந்தன் பொருவெஞ் சிலைசார்த்தி
ஏவாளி தீட்டு மிடம்.

[ நளன், உனக்கு அவளுடன் என்ன சம்பந்தமெனல் ]

36. அன்னமே நீயுரைத்த வன்னத்தை யென்னாவி
உன்னவே சோரு முனக்கவளோ — டென்னை
அடைவென்றான் மற்றந்த அன்னத்தை முன்னே
நடைவென்ற தன்பா னயந்து.

[ அன்னம் விடையளித்தல் ]

37. பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவடன்
மாமனைவாய் வாழு மயிற்குலங்கள் — காமன்
படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள்பாத
நடைகற்பான் வந்தடைந்தேம் நாம்.

38. இற்றது நெஞ்ச மெழுந்த திருங்காதல்
அற்றது மான மழிந்ததுநாண் — மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் தேர்ந்து.

[ அன்னம் அவ்விடத்தை விட்டு நீங்குதல் ]

39. வீமன் திருமகளாம் மெல்லியலை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன் — சேம
நெடுங்குடையாய் என்றுரைத்து நீங்கியதே அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பா லுயர்ந்து.

[ நளன் தமயந்திபால் வேட்கையுறல் [

40. இவ்வளவிற் செல்லுங்கொல் இவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காத லியம்புங்கொல் — இவ்வளவின்
மீளுங்கொ லென்றுரையா விம்மினான் மும்மதநின்
றாளுங்கொல் யானை யரசு.

41. சேவல் குயிற்பெடைக்குப் பேசுஞ் சிறுகுரல்கேட்
டாவி யுருகி அழிந்திட்டான் — பூவி
னிடையன்னஞ் செங்கா லிளவண்ணஞ் சொன்ன
நடையன்னந் தன்பா னயந்து.

42. அன்ன முரைத்த குயிலுக் கலசுவான்
மென்மயி றன்றோகை விரித்தாட — முன்னதனைக்
கண்டாற்றா துள்ளங் கலங்கினான் காமநோய்
கொண்டார்க்கிஃ தன்றோ குணம்.

43. வாரணியுங் கொங்கை மடவாள் நுடங்கிடைக்குப்
பேருவமை யாகப் பிறந்துடையீர் — வாரிர்
கொடியா ரெனச்செங்கை கூப்பினா னெஞ்சந்
துடியா நெடிதுயிராச் சோர்ந்து.

44. கொங்கை யிளநீராற் குளிர்ந்த விளஞ் சொற்கரும்பாற்
பொங்கு சுழியென்னும் பூந்தடத்தின் — மங்கைநறுங்
கொய்தாம வாசக் குழனிழற்கீ ழாறேனோ
வெய்தாமக் காம விடாய்.

[ தமயந்தி அன்னத்திடம் செய்தி வினாதல் ]

45. மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய — நன்னுதலுந்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னுடல் சொல்லென்றா ளீங்கு.

[ அன்னம் நளனை வியந்து கூறுதல் ]

46. செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்க
டம்மனத்தை வாங்கும் தடந்தோளான் — மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு.

47. அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியும் — திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு.



[ தமயந்தி வேட்கை நோயுறல் ]

18. புள்ளின் மொழியினொடு பூவாளி தன்னுடைய
உள்ளங் கவர வொளியிழந்த — வெள்ளை
மதியிருந்த தாமென்ன வாய்த்திருந்தாள் வண்டின்
பொதியிருந்த மெல்லோதிப் பொன்.

49. மன்னன் மனத்தெழுந்த மையனோ யத்தனையும்
அன்ன முரைக்க வகமுருகி — முன்னம்
முயங்கினாள் போற்றன் முலைமுகத்தைப் பாரா
மயங்கினா ளென்செய்வாள் மற்று.

[ நளனைத் தனக்கு மணஞ்செய்து வைக்கும்படி தமயந்தி
அன்னத்தை வேண்டுதல் ]

50. வாவி யுறையு மடவனமே என்னுடைய
ஆவி யுவந்தளித்தா யாதியாற் — காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி யென்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து.

[ அன்னம் அதற்கிணங்கி நளனிடம் செல்லல் ]

51. மன்னன் புயநின் வயமுலைக்குக் கச்சாகும்
என்ன முயங்குவிப்பே னென்றன்னம் — பின்னும்
பொருந்தவன்பா லோதிமலர்ப் பூங்கணைகள் பாய
இருந்தவன்பாற் போன தெழுந்து.

[ வருந்திய தமயந்தியின் நிலையைத் தோழியர்வாய்க் கேட்டநாய்,
வீமராசனுக் துரைத்தல் ]

2. கொற்றவன்றன் றேவிக்குக் கோமகடன் றோழியர்கள்
உற்ற தறியா வுளநடுங்கிப் — பொற்றொடிக்கு
வேறுபா டுண்டென்றார் வேந்தனுக்கு மற்றதனைக்
கூறினாள் பெற்ற கொடி.

[ வீமன் தமயந்தியின் மனைபுகுதல் ]

53. கருங்குழலார் செங்கையினால் வெண்கவரிப் பைங்கால்
மருங்குலவ வார்முரச மார்ப்ப — நெருங்கு
புரிவளைக்கை நின்றேங்கப் போய்ப்புக்கான் பெற்ற
வரிவளைக்கை நல்லார் மனை.

[ தமயந்தி தந்தையை வணங்கல் ]

54. கோதை சுமந்த கொடிபோ லிடைநுடங்கத்
தாதை திருவடிமேற் றான்வீழ்ந்தாள் —மீதெல்லாம்
காந்தாரம் பாடிக் களிவண்டு நின்றரற்றும்
பூந்தார மெல்லோதிப் பொன்.

[ வேந்தன் மலர்வேய்ந்து கொள்ளும் மணம் நடாத்தச் சிந்தித்தல் ]

55. போழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதன்மேல்
நீரரும்பத் தன்பேதை நின்றாளைப் — பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளும் மணம்.

---

# * சுயம்வரகாண்ட உரை

**1. பாண்டவரின் ...**

இதன்பொருள் : பார் முழுதும் - தன்னுடைய நாடு முழுவதையும், தோற்று - (சூதாட்டத்தால்) தோற்றுவிட்டு, ஆண் தகையே - ஆண்மைக் குணமுடைய கண்ணபிரானே, தூதுவனாய்ச் சென்று - தூதுவனாகப் போய், அவனி வேண்ட - (குருநாடாய) பூமியை வேண்டிக் கேட்க, மறுத்தான் - மறுத்தவனான துரியோதனன், இரும் தானை (ஓடும்) - பெரிய சேனையோடும், மண்ணொடும் போய் மாள - பூமியோடும்போய் இறக்கும்படி, பொறுத்தான் - பொறுத்தவனாகிய, பாண்டவரில் - பாண்டு புத்திரர்களில், முன்தோன்றல் - முதற் புத்திரனாகிய தருமன், ஒருநாள் - ஒரு தினத்தில், புலர்ந்து - முகம்வாடி, இருந்தான் - வனத்தில் இருந்தான் என்றவாறு.

தோன்றல் தொழிலாகுபெயராய் அரசனை உணர்த்திற்று. ஆண் தகை - பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. " ஒடு " உருபைத் " தானை " என்பதனோடுங் கூட்டுக.

**2. நாட்டின்கண் ...**

இ - ள் : பேர் எழில் - மிக்க அழகு வாய்ந்த, தோள் வேந்தர் - புயத்தை யுடைய அரசர்களில், வரும் தகையர் எல்லாரும் - வந்து காணுதற்குரிய தன்மையையுடைய யாவரும், நாட்டின்கண் - நாட்டினிடத்து, வாழ்வை - வாழ்ந்திருத்தலை, துறந்து - விட்டு, காட்டில்போய் - (காமிய) வனத்தில் போய், நால் மறையோர் - நான்கு வேதங்களையும் முற்றுமுணர்ந்த முனிவர்களது, ஈட்டங்கள் - கூட்டங்கள், சூழ - தன்னைச் சூழ்ந்திருக்கும்படி, இருந்தானை, இருந்தவனாகிய, பெரும்தகையை - பெருமைக்குணத்தையுடைய தருமபுத்திரனை, வந்து - (வனத்தில்) வந்து, கண்டார்கள் - கண்டு வினவினார்கள் எ - று.

---

* தமயந்தியின் சுயம்வர மணத்தைக்கூறும் காண்டமென்பது பொருள். காண்டம் - நூலின் பெரும்பிரிவு. சுயம்வரமாவது அரசர் பலர் கூடிய சபையின்கண் ஓர் அரசகன்னிகை தான் விரும்பிய அரசனொருவனைத் தேர்ந்து மாலையிட்டு அவனை நாயகனாக அடைதல். சுயம் - தான், வரம் - வரித்தல். இது சமயம்வரம் என்று வழங்கும்.

வாழ்வு - ஆகுபெயராய் வாழ்க்கைக்குரிய பொருளை உணர்த்திற்று. துறத்தல் - பற்றற விடுதல். இறைவனுடைய குணம், செயல், பெருமை, முதலியவற்றையும், ஆழ்ந்த கருத்துக்களையும் தன்னுள் மறைத்துக் கொண்டிருப்பதால் 'மறை' யெனப்பட்டது. வேதத்துக்குக் காரணப் பெயர். ஈட்டம் தொழிலாகுபெயராய்க் கூட்டத்தாரை உணர்த்திற்று; ஈண்டு - பகுதி. அம் - விகுதி. 'பெருந்தகை' பெருமையென்ற பண்படியாகப் பிறந்த அன்மொழித்தொகை. தோளுக்கு எழிலாவது - திரண்டு வளர்ந்து வீரக்குணத்துடன் விளங்குதல்.

## 3. கொற்றவேற்றானை...

இ - ள்: எற்றும் - மோதுகின்ற, நீர் - கடலாற்சூழப்பட்ட, ஞாலத்து - பூமியிலுள்ளாரது, இருள் நீங்க - அஞ்ஞான இருள் நீங்கும்படி, முற்றும் - முழுமையும், வழி - குருபரம்பரையில், முறையே வந்த - முறையாகவே உபதேசிக்கப்பட்டு வந்த, மறை எல்லாம் - வேதங்களையெல்லாம், தந்தான் - சீடர்களுக்கு உபதேசித்த, மொழி - வேதப் பொருள்களை, முறையே கோத்த - முறையாகவே திருத்திக் கோவைப்படுத்திய, முனி - வியாசமுனிவன், கொற்றம்வேல் - வெற்றி பொருந்திய வேலாயுதத்தை ஏந்திய, தானை - சேனைகளையுடைய, குருநாடன்பால் - குருநாட்டுக்கதிபதியான தருமபுத்திரனிடத்து, அணைந்தான் - வந்து சேர்ந்தான். எ - று.

எற்றுநீர் - வினைத்தொகை. அன்மொழித்தொகையாய்க் கடலையுணர்த்திற்று. ஞாலம் - இடவாகுபெயர். குரு என்பவன் சந்திர வம்சத்துப் பேர்பெற்ற ஓர் அரசன். இவனால் அக்குலம் குருகுலம் என்றும், அந்நாடு குருநாடென்றும் அழைக்கப் பட்டது. இவன் குலத்துதித்த தருமன் குருநாடன் எனப்பட்டான்.

## 4. மறை முதல்வ ...

இ - ள்: அ பேர் ஆழியானை - அந்தப் பெரிய (சுதரிசனம் என்னும்) சக்கராயுதத்தைத் தாங்கிய கண்ணபிரானை, அழைத்து - தன்னிடம் வரச் செய்து, ஏவல் கொண்ட அரசு - (துரியோதனனிடம் தூது போய் வருதலாகிய) ஏவற்றொழிலைச் செய்யப்பெற்ற அரசன் (அம்முனிவரை நோக்கி), மறை முதல்வ - வேதங்களை வகுத்த முதன்மையானவனே, நீ—, இங்கே வந்தருளப் பெற்றேன் - இவ்விடத்தில் எழுந்தருளும் பாக்கியத்தை அடைந்தேன் (ஆதலால்), பிறவிப்பெருந்



துயரமெல்லாம் - பிறவியால் வரும் மூவகைத் துன்பங்களும், அற - நீங்க, நான் பிழைத்தேன் - நான் அவற்றினின்று நீங்கி உய்ந்தேன், என்றான் - என்று சொன்னான் எ - று.

பிறவித்துன்பங்கள் மூன்றாவன: தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களால் வருவனவும், தெய்வத்தால் வருவனவுமாம். சரீரத்தைப் பற்றிய தலைவலி முதலியனவும், மனதைப்பற்றிய காமக்குரோதம் முதலியனவும் தன்னைப்பற்றி வருவன. பிற மனிதராலும், துஷ்ட பிராணிகளாலும், பிசாசு முதலியவற்றாலும் வருந் துன்பங்கள் பிறவுயிர்களால் வருவன. காற்று, மழை, இடி முதலியவற்றால் வருந்துன்பங்கள் தெய்வத்தால் வருவன. அ, உயர்வு பற்றிய சுட்டு. ஏவல் - ஆகுபெயர். அரசு - உயர்திணைப் பொருளைக் குறித்து நின்ற அஃறிணைச் சொல். அது ஆகுபெயராய் உடையானைக் குறித்தது.

## 5. மெய்த்திரு ...

இ - ள்: மாமறையால் - பெருமை பொருந்திய வேதத்தினால், உள்ளம் திருந்தி - மனம் செம்மையாகிய, அவாம் - யாவரும் விரும்பத்தக்க, மெய்த்தவத்தோன் - உண்மையான தவத்தையுடையவனான வியாசமுனிவன், தேர்ந்து - தருமனது முகவாட்டத்தை உணர்ந்து, மெய்திரு - உண்மையாகிய செல்வம், வந்து உற்றாலும் - வந்து அடைந்தாலும், வெந்துயர் வந்து உற்றாலும் - கொடிய தரித்திரமாகிய நோய் வந்து சேர்ந்தாலும், ஒத்து இருக்கும் - மாறுபடாது ஒரே தன்மையாகவே இருக்கின்ற, உள்ளத்து - திடசித்தத்தையுடைய, உரவோனே - அறிவுடையவனே, சித்தம் - மனம், வருந்திய ஆறு - வருந்தியவிதம், என்னென்றான் - என்ன என்று கேட்டருளினான் எ - று.

மெய்த்திரு - அறநெறியால் வந்த செல்வம். வெந்துயர் - துயரத்தை விளைக்கின்ற வறுமைத்துயர். வெம்மை + துயர் பண்புத்தொகை. திருந்தி காரணப்பொருட்டாய் வந்த செயவெனெச்சம். சித்தம், தவம் என்பன வடசொற்றிரிபு.

## 6. அம்பொற் கயிலைக்கே ...

இ - ள்: பூதலத்தும் - பூவுலகத்திலும், மீதலத்தும் - சுவர்க்க லோகத்திலும், வாக்கில் - சத்தியவசனத்தில், நேர் இல்லாதமன் - தனக்கு ஒப்புமையுடையோர் இல்லாத தருமபுத்திரன், அம்பொன் - அழகிய வெள்ளியாலாகிய, கயிலைக்கு - கயிலாசமலைக்கு, ஆகத்து - திருமேனியில்,

அரவு அணிவார்தம் - சர்ப்பத்தை ஆபரணமாக அணிந்துள்ள சிவபெருமானது, பொன்படைக்கு - அழகிய பாசுபதாஸ்திரத்தைப் பெறுதற்கு, எம்பியை - என் தம்பியாகிய அருச்சுனனை, தமியன் ஆ(க) - தனியனாக, முன்போக்கினேன் என்று - முன்னமே அனுப்பினேன் என்று, உரைத்தான் - அம்முனிவரிடம் சொல்லி வருத்தமடைந்தான் எ - று.

பொன் என்பது - பொன், வெள்ளி, இரும்பு முதலியவற்றுக்குப் பொதுப்பெயராய் நிற்றலின் ஈண்டு ஏற்றபடி வெள்ளி எனப் பொருள் கொள்ளப்பட்டது. நேர் என்னும் பண்பின் பகுதி நேரவாரைப் பண்பாகுபெயராய் உணர்த்தி நின்றது.

## 7. காண்டாவனந்தீக் ...

இ - ள். காண்டாவனம் - (இந்திரனுக்குரிய) காண்டாவனத்தை, தீக் கடவுள் உண - அக்கினிதேவன் உண்ணும்படி, கைக்கணையால் - கையிற் கொண்டுள்ள அம்பினால், நீண்டமுகில் - (அக்கினிதேவன் உண்ணாமல் தடை செய்ய வருஷித்த) பெரிய மேகங்களை, தடுத்து நின்றற்கு - (பெய்யாது) தடைசெய்துநின்ற அருச்சுனனுக்கு, அமரர் - தேவர்கள், மீண்டு - புறங்கொடுத்துத் திரும்பி, தாள் இரண்டும் நோவ - தங்கள் அடிகளிரண்டும் நோவும்படி, தனித்தனியே - வேறுவேறாக, ஓடியநாள் - (நிலைகுலைந்து) ஓடிய காலத்தில், தோள் இரண்டும் அன்றோ - (அவனுடைய) இரண்டு தோள்களுமல்லவா, துணை - (அவனுக்கு) உதவியாய் நின்றன எ - று.

ஆதலால் இவ்வளவு வலிமை வாய்ந்த அருச்சுனனைக் குறித்து எக் கவலையும் கொள்ள வேண்டாம் என்றவாறும். காண்டாவனம் - காண்டவன் என்ற அரக்கன் வசித்திருந்த இடம். தீக்கடவுள் - பண்புத் தொகை. தனித்தனியே ஓடுதலாவது - ஒருவர் சென்றவழியே ஒருவர் செல்லாது நிலைகுலைந்து பிரிந்தோடுதல். உண்ண என்பது இடைக் குறையால் உண என நின்றது.

காண்டாவனத்தைத் தீயுண்ணக் கொடுத்த கதை :- யாகத்தின் கண்ணிட்ட நெய்யை மிகுதியாக உண்டதினாலேற்பட்ட குன்மவியாதியால் வருந்திய அக்கினிதேவன், அந்தணவேடம் பூண்டு, கண்ணபிரானும் அருச்சுனனும் தனித்திருந்த இடத்திற்கு வந்து "இந்திரன் வனமாகிய காண்டாவனத்தை உணவாக அளிப்பின் அங்கிருக்கும் மூலிகைகளால் என்நோய் நீங்கப்பெறும்" எனக் கேட்டனன். அதுகேட்ட



கண்ணபிரானுடைய கட்டளையால் அக்கினி கொடுத்த அம்புப் புட்டியையும், வில்லையும், தேரையும், வெள்ளைக்குதிரையையும், அநுமக் கொடியையும் பெற்ற அருச்சுனன், கண்ணனோடு சென்று அவ்வனத்தை எரிக்கையில், இந்திரன் சப்த மேகங்களையுமேவி மழைபொழியச்செய்து அக்கினியை அவிக்குமளவில், அருச்சுனன் சரக்கூட்டம் அமைத்து மேகங்களைத் தடுத்தனன். தன்னுடன் பொருவதற்கு வந்த இந்திரன் முதலிய தேவர்களையும் தனித்தனியே புறங்காட்டச் செய்து வனமுழுவதையும் அக்கினிக்கு இரையாக்கினன் என்பதாம்.

## 8. பேரரசு மெங்கள் ...

இ - ள் : என்றும் - எக்காலத்தும், தன் வெண்குடைக்கீழ் - தனது வெண்கொற்றக் குடை நிழற்கீழ், தீது ஒவ - தீமையான காரியங்கள் ஒழியும்படியாக, பார் காத்த சேய் - பூமியிலுள்ளவரைப் பாதுகாத்த முருகக் கடவுளை யொத்த தருமபுத்திரன், அப்பா - அப்பனே, எங்கள் - எங்களுடைய, பேர் அரசும் - பெருமை பொருந்திய ஆளுந்தன்மையும், பெருந் திருவும் - பெரிய செல்வத்தையும், கைவிட்டு - இழந்து விட்டு, சேர்வு அரிய - (எவரும்) செல்லுதற்கு அருமையான, வெம் கானம் - கொடிய காட்டை, சேர்தற்கு - (யாங்கள்) வந்து அடைதற்கு, காரணம் யாதோ என்றான் - காரணம் எதுவோ என்று வினவினான் எ - று.

தீது - ஆகுபெயர். பல பராக்கிரமங்களிலும், அழகிய வடிவிலும், எளிதிற் பகையளித்தலிலும் தருமனுக்கு முருகக்கடவுளுவமை. அரசு ஆகுபெயராய் ஆளுகையை உணர்த்திற்று. சேர்வு தொழிற்பெயர். யாதோ - ஓகாரம் வினவொடு இரக்கப்பொருளது.

## 9. கேடில் விழுச்செல்வங் ...

இ - ள் : இலங்கு - விளங்குகின்ற, அலை - அசைகின்ற, நூல் மார்பன் - பூணூலைத் தரித்த மார்பையுடைய வியாசன், காமருவு - சோலைகள் சூழப்பெற்றுள்ள, நாடற்கு - குருநாட்டையுடைய தருமபுத்திரனுக்கு, கேடு இல் - அழிவில்லாத, விழுச்செல்வம் - பெரிய செல்வம், கேடு எய்து - அழிதலை அடைதற்கு ஏதுவாகிய, சூது ஆடல் - சூதாட்டத்தைச் செய்தல், ஏடு அவிழ் - பூவிதழ்கள் விரியப்பெற்ற, தார் - மாலையை யணிந்த, மன்னர்க்கு - அரசர்களுக்கு, இயல்பே - தகுதியானதே, (ஆதலால்) நீ—, வாடி - வருந்தி, கலங்கலை - மனக்கலக்கமடையாதே,

என்று எடுத்து உரைத்தான் - என்று சொல்லித் தருமபுத்திரனைத் தேற்றினான் எ - று.

விழுச் செல்வம் - பண்புத்தொகை. விழுமம் - பகுதி. கேடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். அவிழ்தார் - வினைத்தொகை.

## 10. கண்ணிழந்து ...

இ - ள்: விண் இழந்த - ஆகாயத்தினின்று நீங்கி வந்த, மின் போலும் - மின்னலைப்போற் பிரகாசிக்கின்ற, நூல் மார்ப - பூணூலைத் தரித்துள்ள மார்பையுடையவனே, கண் இழந்து - அறிவு கெட்டு, மாயக் கவறு ஆடி - வஞ்சகம் பொருந்திய சூதாட்டத்தை ஆடி, மண் இழந்து - (தமது) நாட்டை இழந்து, வனம் போந்து நண்ணி - காட்டில் போய் வசித்து, என்போல் - என்னைப்போல், இடர் உழந்தார் - துன்பத்தால் வருத்தியவரான, காவலர் - அரசர்கள், வேறு உண்டோ - வேறு இருக்கின்றார்களோ எ - று.

விண் - ஆகுபெயராய் மேகத்தை உணர்த்திற்று. மேதினி - திருமாலாற் கொல்லப்பட்ட மதுகைடவர் என்னும் அசுரர்களுடைய மேதஸ் (நிணம்) படிந்தது. பூமிக்குக் காரணப்பெயர். கவறு - சூதாடு கருவி.

## 11. சேமவேன் ...

இ - ள்: தனி செம் கோல் - ஒப்பற்ற செங்கோலையும், நாமம் - அச்சத்தைத் தரத்தக்க, வேல் காளை - வேலாயுதத்தையும் உடைய. காளை போன்றவனான, நளன்என்பான் - நளன் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் அரசன், பண்டு - முற்காலத்தில், யாமத்து - நடு இரவில், ஒலி ஆழிவையம் - ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட பூமியை, ஒருங்கு இழப்ப - ஒருமிக்க இழக்கும்படி, கலிபால் - கலிபுருஷனால், விளைந்த கதை - உண்டாகிய கதையை, சேமம் - (உலகத்துயிர்களுக்கு) காவலாகவுள்ள, வேல் மன்னனுக்கு - வேலாயுதத்தையுடைய தருமபுத்திரனுக்கு, செப்புவான் - (வியாசமுனி) சொல்லுவான் எ - று.

நாமம் என்பதில் அம், சாரியை. நாம் - அச்சம். காளை உவமவாகு பெயர். ஒலி ஆழி வினைத்தொகை. ஆழி - ஆழமுடையது என்னும் காரணப் பெயர்.



## 12. காமர் கயல் ...

இ - ள்: சாகரம் சூழ் - சமுத்திரஞ் சூழ்ந்த, நல்நாட்டில் - நன்மையாகிய பூமியில், முன்னாட்டு - முதன்மையாக எடுத்துக் கூறத்தக்க, நாடு - நிடதநாடானது, காமர் - அழகிய, கயல் புரள - சேல்மீன்கள் புரளுதலாலும், காவி முகை நெகிழ - நீலோற்பல மொட்டுகள் மலர்தலாலும், தாமரையின் - தாமரைப்பூவினது, செம் தேன் தளை - நல்ல தேனோடு கூடிய கட்டானது, அவிழ - விரிதலினாலும், பூமடந்தை தன் - செந்தாமரை மலரில் எழுந்தருளியுள்ள இலக்குமிதேவியினது, நாட்டம் - கண்ணை, போலும் - ஒத்திருக்கும், தகைமைத்து - குணம்பொருந்தியது எ - று.

காமர் - உரிச்சொல். புரள, நெகிழ, அவிழ என்பன காரணப் பொருளில் வந்த செயவெனெச்சங்கள். காவி - குணவாகுபெயர். போலும் - உவம வுருப இடைச்சொல். சூழ் - வினைத்தொகை. சாகரம் - சகரபுத்திரர்களால் தோண்டப் பெற்றது. காரணப்பெயர்.

## 13. கோதைமடவார் ...

இ - ள்: (அத்தன்மைத்தாய நாட்டின்கண்) கோதை மடவார் தம் - மலர்மாலையை அணிந்த பெண்களுடைய, கோது இல் - குற்றமில்லாத, மெய்யில் - உடம்பில், திமிர்ந்த - பூசியிருக்கப்பெற்ற, சீதம் செழும் களபம் சேற்றால் - குளிர்ச்சி பொருந்திய செழுமையான கலவைச் சந்தனச் சேற்றால், வீதிவாய் - வீதிகளிடத்து, மானம் கரி வழுக்கும் - பெருமை பொருந்திய யானைகள் கால் வழுக்கி விழும், மாவிந்தம் என்பது - மாவிந்தம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதாகிய, ஞானம்கலைவாழ் - ஞானத்தைத் தருகின்ற கல்வி நூல்கள் பயில்கின்ற, ஓர் நகர் - ஒரு நகரம் (உண்டு) எ - று.

சீதக் களபச் செழுஞ்சேற்றால் வீதிவாய் மானக் கரிவழுக்கும் என அந் நகரத்துச் செல்வ மிகுதி கூறியபடியால் இது வீறுகோளணி. மடவார் - மடமைக்குணமுடையவர். இக்குணம் இயல்பாகவே பெண்களுக்குள்ள நாற்குணங்களுள் ஒன்று. கரி - கரத்தையுடையது என்னும் காரணப் பெயர். வாழ்நகர் - வினைத்தொகை.

## 14. நின்று புயல்வானம் ...

இ - ள் : தென்றல் - தென்றற்காற்று, அலர்த்தும் - வீரியச் செய்கின்ற, கொடி - கொடிச்சீலைகள் கட்டப்பட்டுள்ள, மாடத்து - உப்பரிகைகளில், ஆய் இழையார் - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை யணிந்த பெண்கள், ஐம்பால் - ( தங்கள் ) கூந்தல்களை, புலர்த்தும் - உலர்த்துவதற்கு ஊட்டுகின்ற, புகை - அகிற்புகை, வான்புகுந்து - ஆகாயத்திற் புகுவதனால், புயல் - மேகம், வான் நின்று - ஆகாயத்திலிருந்து, பொழிந்த - ( காலந்தவறாது ) பெய்த, நெடுந்தாரை - பெரிய மழைத் தாரைகள், என்றும் - பெய்யும்போதெல்லாம், அகில் கமழும் - அகிலின் மணம் மணக்கும், என்பர் - என்று சொல்லுவர் எ - று.

அகில் - முதலாகுபெயர். ஆயிழை - வினைத்தொகை. ஐம்பால் - பெண்கள் கூந்தல்; முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என ஐந்து பகுப்பாய் முடியப்படுதலின் ஐம்பால் எனப்பட்டது. பால் - பகுப்பு. தென்றல் - தெற்குத் திசையிலிருந்துவருங் காற்று.

## 15. வெஞ்சிலையே ...

இ - ள் : கோடுவன - ( அந்நகரத்தில் ) வளைவன, வெஞ்சிலையே - கொடிய விற்களே, சோருவன - தளர்ச்சியடைவன, மெல் குழலே - மென்மையான கூந்தல்களே, வாய்விட்டு அரற்றுவன - வாய் விட்டு அலறுவன, அம் சிலம்பே - ( பாதத்திலணியும்) அழகிய சிலம்பென்னும் ஆபரணங்களே, கலங்குவன - கலக்கத்தையடைவன, கஞ்சமே - தண்ணீரே, மெய் நெறியை விட்டு - உண்மையான நல்வழியைவிட்டு, விலங்குவன - விலகிப்போவன, மாளிகைமேல் - உப்பரிகைமேலுள்ள, காரிகையார் - பெண்களுடைய, கண்ணே - கண்களே, வேறில்லை எ - று.

கோடுவன முதலியவற்றை மனிதர்களிடத்து ஒழித்து சிலை முதலானவற்றிற் காட்டலால் ஒழித்துக்காட்டணி. ஏகாரங்கள் பிரிநிலை. மென்குழல் - பண்புத்தொகை. காரிகையார் கண்கள் மெய்நெறியை விட்டு விலகுதலாவது, தத்தம் நாயகரைக் காணுந்தோறும் உண்டாகும் நாணத்தாலும், மகிழ்ச்சியாலும் நேரே பாராது கண்களை வளைத்துக் கீழ்நோக்கிச் செலுத்துதல். காரிகை - அழகு. ஆர் - பலர்பால் விகுதி. அழகையுடைய பெண்களை உணர்த்திற்று.



## 16. தெரிவன நூல் ...

இ - ள் : என்றும் - எக்காலத்தும், தெரிவன - ( யாவராலும் ) அறியப்படுவன, நூல் - சாஸ்திரங்களே, தெரியாதனவும் - தெரியப்படாதவைகளும், வரிவளையார் - தங்கள் - இரேகைகளையுடைய வளையல்களை அணிந்த பெண்களுடைய, மருங்கே - இடைகளே, ஒருபொழுதும் - எப்பொழுதும், இல்லாதனவும் - இல்லாதவைகளும், இரவே - இரத்தலே, எவரும் - எப்படிப்பட்டவரும், இகழ்ந்து - ஏளனஞ்செய்து, கல்லாதனவும் - கற்காதவைகளும், கரவு - வஞ்சக ஒழுக்கங்களேயாகும் எ - று.

அந்நகரத்திலுள்ளவர்களின் சிறப்புக் கூறியவாறு. வரி - சித்திர வேலை. தெரிவன, தெரியாதன, இல்லாதன, கல்லாதன என்னும் செயப்பாட்டு வினைகளிற் படுவிகுதி தொக்கது. இரவு, கரவு தொழிற் பெயர்கள்.

## 17. மாமனு நூல் ...

இ - ள் : பார் ஆளும் - பூமியை ஆளுகின்ற, வேந்தன் - நள மகாராசனது, பதி - மாவிந்த நகரம், தாமரையாள் - செந்தாமரை மலரிலுள்ள வீரலட்சுமி, வைகும் - தங்குகின்ற, தடம் தோளான் - பெருமை பொருந்திய தோளையுடையவனும், காமர் - அழகிய, பூதாரான் - மலர்களாலாகிய மாலையணிந்தவனுமாகிய, மாமனு நூல் - பெருமை தங்கிய மனுதர்ம சாஸ்திரம், வாழ - வளரும்படி, வரு - பிறந்த, சந்திரன் சுவர்க்கி - சந்திரன் சுவர்க்கி என்னும் அரசனால் செங்கோலோச்சி வரப்பட்ட, முரணைநகர் தான் என்று - முரணை நகரமே என்று, சாற்றலாம் - சொல்லலாம் எ - று.

மனுநூல் - சூரியகுலத்தரசனாகிய மனு என்பவனாற் செய்யப்பட்ட தரும சாஸ்திரம். காமரு - காமர், உ சாரியை. காமர் - கண்டாரால் விரும்பப்படுந் தன்மை; உரிச்சொல்.

## 18. ஓடாத தானை ...

இ - ள் : ஆங்கு - அந் நகரத்தில், பீடு ஆரும் - பெருமைநிறைந்த, செல்வம் பெடை - சிறப்பமைந்த பெண்வண்டு, வண்டு ஒடு ஊடா - ஆண்வண்டுகளுடன் பிணங்கிக் கொண்டதினால், உடைய - அரும்புகள் கட்டவிழ ( அதனால் ) , முருகு - ( ஒழுகுகின்ற ) தேன், அருகு மாதர் முகம் - பக்கத்திலுள்ள பெண்கள் முகங்களை, நனைக்கும் - நனையப்

பண்ணுகின்ற, தண்தார் உடையான் - குளிர்ந்த மாலையை மார்பில் உடையவனும், வெண்குடையான் - வெண்மையான குடையை உடையவனுமாகிய, ஓடாததானை - (பகைவர் சேனைகளுக்குப் பயந்து புறங்காட்டி) ஓடாத சேனைகளையுடைய, நளன் என்று - நளமகாராசன் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, ஒருவன் - ஒரு அரசன், உளன் - இருந்தான் எ - று.

வண்டுக்குச் செல்வமாவது - பொன் வரிகளையும், பொற் சிறகுகளையும் உடைமை. ஊடுதல் - கலவியில் நிகழும் பிணக்கம். ஊடா - காரணப் பொருளில் வந்தது.

## 19. சீதமதிக் ...

இ - ள் : தாது - மகரந்தப்பொடி, அவிழ் - சிந்துகின்ற, பூதாரான் - பூமாலையை அணிந்த நளமகாராசன், சீதம் மதிக்குடைக் கீழ் - குளிர்ச்சி பொருந்திய சந்திரன் போன்ற தனது குடைநிழலின்கீழ், செம்மை அறம் - குற்றமில்லாத தருமங்கள், கிடப்ப - நிலைநிற்கவும், மாதர் - பெண்கள் - அருகு ஊட்டும் - பக்கத்தில் வைத்து உணவுகளை ஊட்டி வளர்க்கின்ற, பைங்கிளியும் - பசுமையாகிய கிளிகளும், ஆடல் பருந்தும் - வலிமையையுடைய பருந்தும், ஒரு கூட்டில் - ஒரே கூண்டில், வாழ - சேர்ந்து வசிக்கவும், உலகு - உலகத்தை, தனிக்காத்தான் - பிறருக்குப் பொதுவில்லாமல் ஆண்டான் எ - று.

தாரான் கிடப்ப, வாழ, உலகு காத்தான் எனக்கூட்டுக. பைங்கிளி - பசுமை கிளி. அவிழ் - வினைத்தொகை. தனிக்காத்தலாவது பல நாடுகளையும் வென்று பிறருக்குச் சிறிதுஞ் சுதந்திரமின்றி ஆளுதல். இதனால் இவன் சக்கரவர்த்தி என்பது விளங்கும். மதிக்குடை - உவமத்தொகை.

## 20. வாங்குவளைக் ...

இ - ள் : தேன் குவளை - வாசனை மிகுந்த குவளைமலர்களிலுள்ள, தேன் - தேன்களில், ஆடி - முழுகி, வண்டு - வண்டுகள், சிறகு உலர்த்தும் - இறகுகளை உலரச்செய்கின்ற, நீர் நாடன் - நீர்வளமிக்க நிடதநாட்டரசனாகிய நளன், பூநாடி - மலர்களை விரும்பி, சோலை புக - சோலையிற் போகிறதற்கு, வாங்கு - வளைந்த, வளைக்கையார் - வளையல்களை யணிந்த கைகளையுடைய பெண்களின், வதனமதி - முகமாகிய சந்திரனிடத்து, பூத்த - மலர்ந்த, பூங்குவளைக் காட்டிடையே - (கண்களாகிய) அழகிய நீலோற்பலக் காட்டின் நடுவில், போயினான் - சென்றான் எ - று.



நாடன், நாடி புகழப் போயினான் என்க. வதனமதிபூத்த பூங்குவளை யென்றது முகத்தின்கண்ணுள்ள கண்களை; உருவகம். குவளை முதலாகுபெயர். காடு - தொகுதி. தேன் + குவளை = தேங்குவளை.

## 21. வென்றிமதவேடன் ...

இ - ள் : நின்ற - (முல்லை நிலத்தில்) வளர்ந்து நின்ற, தளவ - முல்லைக்கொடிகள், ஏனல்மீது - (குறிஞ்சி நிலத்திலுள்ள) தினைப் பயிரின்மேல் படர்ந்து, அலரும் - மலர்கின்ற, தாழ்வரை - நீண்ட மலைகள், சூழ் நாடற்கு எதிர் - சூழ்ந்த நாட்டையுடைய நளனுக்கு எதிரில், வென்றி - வெற்றியையுடைய, மதன்வேள் - மன்மதன், தன் வில் எடுப்ப - போர் செய்யத் தனது வில்லைக் கையில் எடுக்கவும், தென்றல் - தென்றற் காற்று, வீதி எலாம் - அரசன் செல்லும் வீதி முழுமையும், மது நீர் - (மலர்களின்) தேனாகிய நீரை, தெளித்துவர - தெளித்துக்கொண்டு வரவும், இளவேனில் - இளவேனிற்காலமானது, வந்தது - வந்து சேர்ந்தது எ - று.

இளவேனிற்காலம் - சித்திரை வைகாசி மாசங்கள். மன்மதனுக்கு வென்றியாவது விரும்பினவரைத் தன்வசப்படுத்துதல். சூழ்நாடு - வினைத்தொகை. வென்றி - தொழிற்பெயர். வெல் - பகுதி; றி - விகுதி. 'நின்றதளவேனல் மீதலருந் தாழ்வரைசூழ் நாடன்' என்றதால் நிடத நாட்டில் முல்லைக்கும் குறிஞ்சிக்கும் உள்ள அணிமையும், இந்நாடு மலையரணிற் சிறந்ததென்பதும் விளங்கும்.

## 22. தேரிற்றுகளைத் ...

இ - ள் : கார்வண்டு - கருமையாகிய வண்டுகள், தொக்குஇருந்து - கூடியிருந்து, ஆலித்து - சந்தோஷித்து, உழலும் - உலாவித்திரிகின்ற, தூங்கு இருள் - மிகுந்த இருள், வெய்யோற்கு ஒதுங்கி - சூரியனொளிக்கு (பயந்து) மறைந்து, புக்கு இருந்தால் ஒன்ன - புகுந்திருப்பதையொத்த, பொழில் - சோலையை, தேரின் துகளை - தேர் செல்லுதலாலுண்டாகும் தூசிகளை, திருந்து இழையார் - முத்தமான ஆபரணங்களை யணிந்த பெண்களது, பூ குழலின் - பூவையணிந்த கூந்தலினது,

வேரிபுனல் - தேனாகிய நீர், நனைப்ப - நனைக்கும்படி, அடைந்தான் - (நளமகாராசன்) சேர்ந்தான் எ - று.

பெண்களது குழலின் வேரிப்புனல், தேர்செல்லுதலாலெழுந்த துகளை நனைப்பப் பொழிலையடைந்தான் நளன் என்க. கார்வண்டு - பண்புத்தொகை. வெய்யோன் - வெம்மையென்னும் பண்படியாகப் பிறந்தபெயர்.

## 23. நீணிறத்தாற் ...

இ - ள்: அப்பு உள் - நீரில், தோன்றும் - உண்டாகின்ற, முளரித் தலை - தாமரைமலரிடத்து, வைகும் - வாசஞ்செய்யும், அன்னப்புள் - அன்னப்பறவையானது, நீள் நிறத்தால் - நெடுந்தூரம் விளங்குகின்ற தனது இறகின் வெண்ணிறத்தால், சோலை - (இருண்ட) அந்தச் சோலையானது, நிறம்பெயர - நிறம் வேறுபட, நீடியதன் தாள் நிறத்தால் - நீண்ட தன்னுடைய கால்களின் சிவந்த நிறத்தால், பொய்கைத் தலம் - தடாக இடம், சிவப்ப - சிவக்கவும், ஆங்கு - அச்சோலையில், மாண் நிறத்தான் முன் - மாட்சிமை வாய்ந்த மார்பையுடைய நளமகாராசனுக்கு முன்னே, தோன்றிற்று - காணப்பட்டது எ - று.

அன்னப்புள் பெயர, சிவப்ப, ஆங்கு முன் தோன்றிற்று என்க. உடல் முழுவதும் வெண்மையாயும், காலும் மூக்கும் செம்மையாயும் விளங்கும் உத்தம இலக்கணம் அரச அன்னத்திற்கு உண்டு. முளரி ! முதலாகுபெயர். முன்னப்புள், அன்னப்புள் என்ற அடிகள் திரிபுநயம்.

## 24. பேதை மடவன்னம் ...

இ - ள்: மேதி குலம் - எருமைக்கூட்டம், ஏறி - வயல்களிற் சென்று, மென்கரும்பை - மென்மையான கருப்பங்கழிகளை, கடித்துக் கோதி - கடித்துத் தின்று, முத்து உமிழும் - முத்துக்களைக் (கடைவாயினின்றும்) கக்குகின்ற, கங்கை நீர் நாடன் - கங்கைநதிபாயும் நிடதநாட்டரசன், பெயர்ந்து - அங்கே போய், பேதை - பெண்ணே, மடம் அன்னம் தனை - இளமையான அன்னப்பறவையை, பிழையாமல் - தப்பாமல், பிடித்துத்தா என்றான் - பிடித்துத்தா என்று கேட்டான் எ-று.

நீர்நாடன் பெயர்ந்து சென்று பேதை என்னும் பெண்ணே! அன்னந் தன்னைப் பிடித்துத்தா என்றான் என்க. பிழையாமை - தப்பியோடாமை. கரும்பு முத்துப் பிறப்பிடங்களில் ஒன்று.



## 25. நாடிமடவன்னத்தை ...

இ - ள்: நல்ல மயில் குழாம் - சிறந்த மயிற்கூட்டம், மடம் அன்னத்தை நாடி, இளமையையுடைய அன்னப்பறவையைப் பிடிக்க விரும்பி, ஓடி - சுற்றி, வளைக்கின்றது ஒப்ப - வளைத்துக் கொள்வதைப் போல, நீடிய - நீண்ட, நல் பைங்கூந்தல் வல்லியர் - நல்ல கரிய கூந்தலையுடைய பூங்கொடிபோன்ற பெண்கள், பற்றிக் கொடுபோந்து - அன்னத்தைப் (வளைத்து) பிடித்துக் கொண்டுவந்து, தம் கோவின்முன் - தங்கள் அரசனாகிய நளனுக்கு எதிரில், தாழ்ந்து வைத்தார் - வணங்கி வைத்தார்கள் எ - று.

வல்லி - உவமவாகுபெயர். முன் - இடமுன். இச் செய்யுள் உவமையணி; ஏ - அசை. வல்லி பெண்களின் உறுப்புகளில் இடைக்கும், அவர்களது மெல்லிய தன்மைக்கும் உவமை கூறப்படும். கோ - தலைமையுணர்த்தும் ஒரு சொல்.

## 26. அன்னந் தனைப்பிடித்து ...

இ - ள்: அங்கு - அச்சோலையில், ஆய் இழையார் - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களையணிந்த பெண்கள், அன்னம் தனைப்பிடித்து, அன்னப்பறவையைப் பிடித்துக்கொண்டுபோய், மன்னன் திருமுன்னர் - நளமகாராசனது அழகிய சமூகத்தில், வைத்தலுமே - வைத்தவுடனே, அன்னம் - அந்த அன்னமானது, தன்னுடைய - தனது, வான்கிளையைத் தேடி - பெரியசுற்றத்தைத் தேடி, மலங்கிற்று - வருந்தியதாய், மன்னவனைக் கண்டு - அரசனைப்பார்த்து, கலங்கிற்று - கலக்கமடைந்தது எ - று.

ஆயிழையார் அன்னந்தனைப் பிடித்து வைத்தலும், தேடி, மலங்கி, கண்டு கலங்கிற்று என்க. திரு - கண்டாரால் விரும்பப்படுந்தன்மை. பண்புப்பெயர். பிடிபட்டபோது கலங்குதலாகிய அதன் சாதித் தன்மைகளைச் சொல்லுதலால் இச் செய்யுள் தன்மைநவிற்சியணி. கிளை உவம ஆகுபெயர்.

## 27. அஞ்சல் மடவனமே ...

இ - ள்: களிவண்டு - (தேனுண்டு) களித்தலையுடைய வண்டுகள், மாண - தாம் செழிப்புறும்படி, பிடித்த - பற்றியுள்ள, தார்மன் - மாலையணிந்த நளமகாராசன், மடம் அனமே - இளமையான அன்னமே!, அஞ்சல் - பயப்படாதே, உன்தன் அணிநடையும் - உன்னுடைய அழகிய

நடையும், வஞ்சி அனையார் மணிநடையும் - வஞ்சிக்கொடி போன்ற மெல்லிய பெண்களது அழகிய நடையும் (ஆகிய இவ்விரண்டனுள்) விஞ்சியது காண - மேலானது இன்னதென்று பார்க்கும்பொருட்டே, பிடித்தது - (நான் உன்னைப்) பிடித்தது, என்றான் - என்று சொன்னான் எ - று.

அன்னமே உன்னை யான் பிடித்தது கொல்வதற்காவது கூட்டிலடைத்து வருத்துவதற்காவது அல்ல; உன் நடையின் அழகையும் உன்னடைக்கு ஒப்பாகக் கூறப்படும் பெண்களது நடையினையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கே. ஆதலால் நீ அஞ்சற்க எனக் கலங்கிய அன்னத்திற்குத் தேறுதல் கூறினான். என்க. களிவண்டு - வினைத்தொகை. அனம் - அன்னமென்பதின் விகாரம். அஞ்சல் - எதிர்மறை ஏவல்வினை முற்று.

## 28. செய்யகமலத் ...

இ - ள் : செய்ய கமலம் - செந்தாமரை மலரில் வாசஞ் செய்கின்ற, திருவை நிகரான - இலக்குமியை ஒத்த, தையல் - பெண்ணால், பிடித்த - பிடித்துக்கொண்டுவரப்பட்ட, தனி அன்னம் - ஒப்பற்ற அந்த அன்னப்பறவையானது, வெய்ய - கொடிய, அடுமாற்றம் இல்லா - கொல்லும் பகைமைக்குணமற்ற, அரசன் சொல் - நளனது பேச்சை, கேட்டு—, தடுமாற்றம் - மனக்கலக்கம், தீர்ந்தது - நீங்கப்பெற்றது எ - று.

அரசன்முன் வைக்கப்பட்ட அன்னமானது அவனது இனிய ஆறுதல் மொழியால் கொலைப்பயம் நீங்கித் தெளிந்தது என்பதாம். கமலம் = கம் + அலம். கம் - சலத்தில்; அலம் - பிரகாசிப்பது; வடசொல்; ஆகுபெயர். அடுமாற்றம் - வினைத்தொகை. தடுமாற்றம் - தொழிற்பெயர். இல்லா (த) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

## 29. திசைமுகந்த ...

இ - ள் : திசைமுகந்த - எட்டுத் திக்கிலுள்ளாரையும் தன்னுளடக்கிய, வெண்கவிகை - வெண்கொற்றக்குடையையும், தேர் - தேர்ச்சேனையையுமுடைய, வேந்தே - அரசனே!, இசை முகந்த - கீர்த்தி நிரம்பப்பெற்ற, உன்தன் - உன்னுடைய, தோளுக்கு - தோள்களுக்கு, மென்தோள் - மென்மையானதோள், அமையந்தி - மூங்கில்போலும் அழகுடையாள், என்று - என்றுசொல்லப்பட்ட, ஓர் அணங்கு - ஒரு தெவப் பெண்போன்ற, வசை இல் - (அழகு, குணம், செயல் இவற்றால்) குற்றமில்லாத, தமையந்தி, என்று—, ஓதும் - சொல்லப்பட்ட, தையலாள் - பெண்ணானவள், இசைவாள்—, தகுதியாவாள் எ - று.



வேந்தே! உன் தோளுக்குத் தமயந்தி யென்றோரணங்கு இசைவாள் என்க. திசை ஆகுபெயராய்த் திசையிலுள்ளாரை உணர்த்திற்று. தமையந்தி - அகரத்திற்கு ஐகாரம் போலியாயிற்று. அந்தத்தை யுடையவள் - அந்தி. (அந்தம் - அழகு) இ - பெண்பால் விகுதி.

## 30. அன்ன மொழிந்த ...

இ - ள் : பார்மடந்தை கோமான் - பூமியாகிய பெண்ணுக்கு அரசனாகிய நளன், அன்னம் மொழிந்த - அன்னப்பறவை சொல்லிய, மொழி புகாமுன் - சொல் செவியில் நுழையாததற்கு முன்னமே, கன்னி - கன்னிப் பருவத்தினளாகிய தமயந்தி, மனக்கோயில் - தன் மனமாகிய கோயிலை, புக்கு - (உள்ளே) புகுந்து, கைக்கொள்ள - சுவாதீனஞ் செய்துகொண்டதனால், அநங்கன் - மன்மதன், சிலைவளைப்ப - கரும்பு வில்லை எடுத்து வளைத்ததினால், பதைத்து - மனம்பதறி, சொன்ன மயில் - நீ சொல்லிய மயிலுக்கு ஒப்பானவள், ஆர்மடந்தை - யாருடைய மகள், என்றான் - என்று (அன்னத்தை) வினாவினான் எ - று.

கோமான், மனக்கோயில் கன்னிகைக் கொள்ள, வளைப்ப, பதைத்து ஆர்மடந்தை! என்றான் எனக் கூட்டுக. மொழி - மொழியப்படுவது எனும் பொருளது. செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது. கன்னி - விவாகமாகாத இளம்பெண். மயில் - உவமவாகுபெயர். ஆர் - யார் என்பதன் மரூஉ. மடந்தை இங்கே பெண் என்ற மாத்திரையாய் நின்றது. இது மிகையுயர்வு நவிற்சியணி. காரணத்திற்குமுன் காரியங்கள் பிறத்தலைச் சொல்லுதலால்.

## 31. எழுவடுதோள் ...

இ - ள் : எழு அடு தோள் - தூணை வென்ற தோளையுடைய, மன்னா - அரசனே!, இலங்கு இழை - விளங்குகின்ற ஆபரணங்களையணிந்த தமயந்தியாகிய அப் பெண்ணானவள், உழுநர் - உழவர், ஏர் தூண்ட - ஏரைச் செலுத்துகையில், கொழுநுதியில் - கொழு என்னுங் கருவியின் நுனியால், சாய்ந்த - சாய்ந்து விழுந்த, குவளை - குவளை

மலர்களினின்றும், மடைமிதிப்ப - நீர் மடைகளை மிதித்து விடும்படி, தேன்பாயும் - தேன்பாயப்பெற்ற, மாடு - பக்கங்களையுடைய, ஒலி நீர் நாடன் - ஒலிக்கின்ற நீர்வளப்பம் மிக்க விதர்ப்பநாட்டரசனாகிய, கொடை விதர்ப்பன் - கொடுக்குங்குணமுடைய வீமராசன், பெற்றது ஓர் கொம்பு - பெற்றெடுத்த ஒப்பற்ற பூங்கொம்பு போல்வாள் எ - று.

மன்னா! இலங்கிழை நாடன் பெற்ற கொம்பு என்க. அடுதோள் - வினைத்தொகை. இலங்கிழை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஒலிநீர் - வினைத்தொகை. கொம்பு என்றதற்கேற்ப பெற்றது என்றார்.

## 32. நாற்குணமும் ...

இ - ள் : (தமயந்தி) நால்குணமும் - நான்கு குணங்களும், நால் படை ஆ (க)- நான்குவகைச் சேனைகளாகவும், ஐம்புலனும் - ஐந்து பொறிகளும், நல் அமைச்சு ஆ - அறிவுடைய மந்திரியாகவும், ஆர்க்கும் சிலம்பே - பாதத்தில் அணியப்பெற்று ) ஒலிக்கின்ற சிலம்பு என்னும் ஆபரணங்களை, அணி முரசு ஆ - அழகிய முரசுவாத்தியங்களாகவும், கண் ( எ ) - கண்களை, வேல்படையும் வாளும் ஆ - வேலாயுதமும் வாளாயுதமுமாகவும், வதனம் மதி குடைக்கீழ் - முக சந்திரனாகிய குடையின் கீழே, பெண்மை அரசு - பெண்தன்மையாகிய இராச்சியத்தை, ஆளும் - ஆளுவான் எ - று.

நான்கு குணங்களை தன்னைக் காக்கின்ற சதுரங்க சேனைகளாகவும், பஞ்சேந்திரியங்களை நன்னிலையில் நிறுத்தும் அறிவிற் சிறந்த மந்திரிகளாகவும், காலில் அணிந்திருக்கும் நூபுரங்களை பெருமை முதலியவற்றை வெளிப்படுத்தும் முரசு வாத்தியங்களாகவும், தன்னுடைய கண்களை எதிர்த்தவரை வருத்தும் வேலாயுதமும் வாளாயுதமுமாகவும், ஓர் அரசனைப் போற் கொண்டு, முகமாகிய சந்திரவட்டக் குடையின் கீழ், பெண்தன்மையாகிய அரசை ஆளுகை செய்யும் என்பதாம். நாற்குணம் : நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு. நாற்படை : தேர்,யானை, குதிரை, காலாள். ஐம்புலன் : சுவை, ஒளி, ஊறு ஓசை, நாற்றம். 'வாளுமே' என்றதிலுள்ள ஏகாரத்தைக் கண் என்பதனோடும், 'கண்ணே' என்பதிலுள்ள ஆகாரத்தை வேற்படையும் வாளும் என்பனவற்றுடனும் கூட்



டிப் பொருள் கொள்க. ஆக என்னும் செயவெனெச்சங்கள் ஈறு குறைந்தன. இச் செய்யுள் உருவக அணி.

## 33. மோட்டிளம் ...

இ - ள் : இடை - இடையானது, மோடு இளங் கொங்கை - உயர்வாகிய இளமை பொருந்திய முலைகளை, சுமந்து ஏற மாட்டாது - தாங்கி நிற்கமாட்டாது, என்று—, நாள் தேன் - புதிய தேன், அலம்பு - ததும்புகின்ற, வார் - நீண்ட, கோதை - கூந்தலையுடைய தமயந்தியின், இணையடியில் - இரண்டு பாதங்களிலும், நூபுரங்கள் - சிலம்புகள், வீழ்ந்து பூண்டு - வீழப்பெற்று விடாமற்பற்றி, வாய்விட்டுப் புலம்பும் - வாய்விட்டு அலறும் எ - று.

இடைசுமந்தேறமாட்டாதென்று நூபுரம் கோதை அடியில் வீழ்ந்து பூண்டு வாய்விட்டுப் புலம்பும் என்க. பிறர் துயரங் கண்டிரங்கும் பெரியோர் போல. நூபுரம் - நுண்ணிய இடை, கொங்கைகளைச் சுமந்து நிற்க ஆற்றாதென வருந்தி முறையிட்டதென்பதாம். இது தற்குறிப் பேற்றவணி. மோடு - மோட்டெனக் குற்றியலுகரந் தன்னொற்றிரட்டியது. அலம்புவார் வினைத்தொகை. வார் கோதை - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

## 34. என்று நுடங்கும் ...

இ - ள்: ஏழ் உலகும் - ஏழு தீவுகளிலும், நின்ற - நிலைபெற்ற கவிகை நிழல் வேந்தே - குடையின் நிழலையுடைய அரசனே, இடை - தமயந்தியின் இடையானது, அறுகால் சிறுபறவை - ஆறுகால்களையுடைய வண்டுகள், ஒன்றி - பொருந்தி, அம் சிறகால் - ( தமது ) அழகிய சிறகுகளால், வீசும் - வீசுகின்ற, சிறு காற்றுக்கு - மெல்லிய காற்றுக்கு, ஆற்றாது - பொறுக்காது, தேய்ந்து - சுருங்கி, என்றும்—, நுடங்கும் - அசைந்துகொண்டிருக்கும், என்ப—, எ - று.

வேந்தே இடை காற்றுக்கு ஆற்றாது தேய்ந்து நுடங்கு மென்க. ஏழு தீவுகள் - நாவல், இறலி, குசை, கிரௌஞ்சம், கமுகு, தெங்கு, புட்கரம். ஏழுலகு - பண்புத்தொகை. என்ப - பலர்பாற் படர்க்கை வினைமுற்று.

## 35. செந்தேன் மொழியாள் ...

இ - ள் : பூவாளி வேந்தன் - மலர்ப்பாணங்களையுடைய அரசனான மன்மதன், என்றும் வந்து - எப்பொழுதும் வந்து, பொரு வெம் சிலை - போர் செய்தற்குரிய கொடிய வில்லை, சார்த்தி - வைத்து, ஏ ஆளி - அம்பு வரிசைகளை, தீட்டும் இடம் - தீட்டுகின்ற இடமானது, செம் தேன் மொழியாள் - செம்மையான தேன்போன்ற இனிய சொற்களையுடைய தமயந்தியினது, செறி - நெருங்கிய, அளக பந்தியின்கீழ் - முன் மயிர் வரிசையின்கீழ் (இருக்கிற), இந்து முறி - சந்திரனது துண்டம், என்று இயம்புவார் - என்று சொல்லுவார்கள் எ - று.

வேந்தன் தீட்டுமிடம் இந்துமுறியென் றியம்புவார். தீட்டுமிடம் - தீட்டுதற்குரிய சாணைக்கல். இந்துமுறி யென்றது - இளம்பிறையைப் போன்ற நெற்றியை. உருவகம். சிலை என்றது தமயந்தியின் புருவத்தை. செறி அளகம் - வினைத்தொகை.

## 36. அன்னமே ...

இ - ள் : அந்த அன்னத்தை - (தமயந்தியைப்பற்றிச் சொல்லிய) அவ்வன்னப்பறவையை, முன்னே - இளம்பருவத்திலேயே, நடை வென்றாள் தன்பால் - நடையில் வெற்றி கொண்டவளாகிய தமயந்தியினிடத்தில், நயந்து - விருப்பமுற்று, அன்னமே—!, நீ உரைத்த அன்னத்தை - இப்பொழுது நீ என்னிடம் சொல்லிய அன்னம் போல்வாளாகிய தமயந்தியை, உன்ன - நினைக்க, என் ஆவி சோரும் - எனது உயிர் தளர்கின்றது, உனக்கு அவளோடு—, அடைவு என்னை என்றான் - சம்பந்தம் யாது என்று வினவினான் எ - று.

அவளைத் தனக்குக் கூட்டுவித்தற்குரிய இயைபு அன்னத்திற்கு உண்டோ எனத் தெரிய இங்ஙனம் வினவினான். அடைவு - சேர்க்கை, தொழிற்பெயர்; அடை - பகுதி. வு - தொழிற்பெயர் விகுதி. நடை - தொழிற்பெயர். இரண்டாவது அன்னம் உவமவாகுபெயர்.

## 37. பூமனைவாய் ...

இ - ள் : பூமனைவாய் வாழ்கின்ற - தாமரை மலராகிய வீட்டில் வாசஞ் செய்கின்ற, புள்குலங்கள் - பறவைக் கூட்டங்களாகிய யாம், அவள்தன் - தமயந்தியினுடைய, மாமனைவாய் வாழும் - பெரிய மாளிகையில் வாசஞ் செய்கின்ற, மயில் குலங்கள் - மயிற்கூட்டங்களாக விருக்கிறோம், காமன் - மன்மதன், படைகற்பான் - (அவளுடைய கண்களிடத்திற்) படைத்தொழிலைக் கற்கும்பொருட்டு, வந்து அடைந்தான் - வந்து சேர்ந்தான், நாம் - நாங்கள், பை தொடியாள் - பசிய வளையல்களை யணிந்த தமயந்தியினுடைய, பாதம் - கால்களிடத்தில், நடைகற்பான் - நடையைக் கற்பதற்கு, வந்து - விரும்பி வந்து, அடைந்தேம் - சேர்ந்தோம் எ - று.

எனவே தமயந்திக்கு விளையாட்டுப் பொருளாய் உடனுறைதலே எங்கட்கும் அவளுக்குமுள்ள சம்பந்தம் என்றதாயிற்று. பூமனை - பண்புத்தொகை. பூ, தலைமைபற்றித் தாமரை மலருக்கானது. ஆடவர் மனதைக் கவர்ந்து வருத்துகின்ற தன்மையால் கண்கள் மன்மதனுக்குப் படைபயிற்றும் இடமாகக் கூறப்பட்டன. யாம் என்றது தன் இனங்களை யுளப்படுத்தி.

## 38. இற்றது நெஞ்ச ...

இ - ள் : வெம் காமம் தீ உடைய - வெப்பம்பொருந்திய காமமாகிய தீயையுடைய, நெஞ்சு உடையான் - மனமுடைய நளன், தேர்ந்து - துணிந்து, நெஞ்சம் இற்றது - மனநிலையழிந்தது, இரும் காதல் எழுந்தது - மிகுந்த ஆசை அதிகரித்தது, மானம் அற்றது - மானம் ஒழிந்தது, நாண் அழிந்தது - நாணம் கெட்டது, (ஆதலால்) இனி - இனிமேல், என்னுடைய வாழ்வு - எனது உயிர்வாழ்க்கை, உன்வாய் உடையது - உன் வாயின் சொல்லளவில் நின்றது, என்றான் - என்று சொன்னான் எ-று.

எனவே தமயந்தியைப் பெறுதல் உன்னாலன்றி என் முயற்சியால் ஆவதொன்றில்லையென அவளையடைதலின் அருமைகூறியவாறும். 'உன் வாயுடையது என்னுடைய வாழ்வு' என்று கூறினான் உனது சொற்சாதுரியத்தால் அவளை எனக்கு உடம்படுத்தி வருவாயாயின் யான் உயிரோடிருப்பேன், அன்றேல் உயிர் நீங்கப்பெறுவேன் என்பதை வெளிப்படுத்தற்கு. வாயுடையது என்றது, அன்னத்தின் சொற்சாதுரியத்தாலாகுங் காரியத்தை. நெஞ்சம் இறுதல் - ஆடவர்க்குரிய அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி யாகிய குணங்கள் கெடுதல். மானம் - நற்குடியிற் பிறந்தவன் எஞ்ஞான்றும் தன்னிலையினின்றுந் தாழாமையும்,

ஓரோவழித் தாழ்வு வந்த விடத்து உயிர் வாழாமையுமாம். நாணம் - மனக் கூச்சம். வாழ்வு - தொழிற்பெயர்.

## 39. வீமன் திருமகளாம் ...

இ - ள்: சேமம் - (உயிர்களுக்குத் தண்ணளியாகிய நிழலைக் கொடுத்தலால்) காவலான, நெடும் குடையாய் - பெரிய குடையையுடைய அரசனே!, வீமன் திருமகளாம் - வீமராசனது புத்திரியான இலக்குமியை யொத்த தமயந்தியான, மெல்லியலை - மெல்லிய மேனியாளை, உன்னுடைய—, வாமம் நெடும் புயத்து - அழகிய பெரிய தோள்களிடத்து, வைகுவிப்பேன் - தங்கும்படி செய்வேன், என்று உரைத்தது - என்று இங்ஙனம் சொல்லி, அன்னம் - அன்னமானது, ஒடுங்கு இடையாள் தன்பால் - சிறுத்த இடையை யுடையவளான தமயந்தியிடத்து, உயர்ந்து - உயரப்பறந்து, நீங்கியது - போயிற்று எ - று.

மெல்லியல் - அன்மொழித்தொகை. பல அரசர்களும் விரும்புதற் கேதுவாகிய அழகுநலம் வாய்ந்த தமயந்திக்கு உனது அழகு முதலிய பெருமைகளை எடுத்துக்கூறி உன்னை மணக்கும்படி செய்வேன் என்றவாறும். ஒடுங்கு இடை - வினைத்தொகை.

## 40. இவ்வளவிற் செல்லுங்கொல் ...

இ - ள்: மும்மதம் நின்று - மூன்று மதங்களும் பொருந்தி, ஆளும் - ஆட்சி செய்யும்படியான, கொல் யானை அரசு - கொல்கின்ற யானையையுடைய நளமகாராசன், இவ்வளவிற் செல்லுங்கொல் - இதுவரை சென்றிருக்குமோ, இவ்வளவில் காணுங்கொல் - இவ்வளவுநேரத்திற் பார்த்திருக்குமோ, இவ்வளவில் காதல் இயம்புங்கொல் - இவ்வளவு காலத்துள் (தனது) ஆசையைச் சொல்லியிருக்குமோ, இவ்வளவில்—, மீளுங்கொல் - (அன்னம்) திரும்புமோ, என்று உரையா - என்று சொல்லிக்கொண்டே, விம்மினான் - துக்கத்தினால் தேம்பிக்கொண்டிருந்தான் எ - று.

காமமுற்றார்க்கு ஒரு நாழிகையும் ஓர் ஊழிபோற் காணப்படுமாதலின், இவ்வளவிற் செல்லுங்கொல் என்று நினைத்ததற்குப் பிற்பட்ட சிறிதுகாலத்தைப் பெரிதாய் எண்ணி இவ்வளவிற் காணுங்கொல் என்றது முதலாக எடுத்துக்கூறி நளன் வருந்தினான் என்றவாறு. மும்மதம் - கன்னமதம், கபோலமதம், கோசமதம் என்பன. அளவு காலத்திற்குப் பண்பாகுபெயர். விம்முதல் - பெருமூச்செறிதல்.



## 41. சேவல் குயிற்பெடைக்குப் ...

இ - ள்: (நளன்) பூவின் இடை அன்னம் - செந்தாமரை மலரில் எழுந்தருளியிருக்கின்ற அன்னம்போன்ற திருமகளையொத்தவளும், செம் கால் இளவன்னஞ் சொன்ன - சிவந்த காலையுடைய இளமையாகிய அன்னத்தாற் சொல்லப்பட்ட, நடையன்னந்தன்பால் - நடையிற் சிறந்த அன்னம்போன்ற தமயந்தியினிடத்து, நயந்து - விருப்பங்கொண்டு, சேவல் - ஆண்குயில், பெடை குயிலுக்கு - பெண்குயிலுக்கு, பேசும் - (கலவிக் குறிப்பைக் காட்டிப்) பேசுகின்ற, சிறுகுரல் கேட்டு - மெல்லிய ஓசையைக் கேட்டு, ஆவி உருகி - உயிர் தளர்ந்து, அழிந்திட்டான் - அறிவிழந்தவனானான் எ - று.

ஒன்றோடொன்று குலவிக்கூவும் குயிலினொலியைக் கேட்டுத் தமயந்தியிடம் காதல் கொண்ட தானும் அவ்வாறு தமயந்தியை மணந்து கூடியிருத்தற் கில்லையேயென வருந்தினான் என்க. பெடைக்குயில் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. குயிற்பெடையென மாற்றுக.

## 42. அன்னமுரைத்த ...

இ - ள்: அன்னம் உரைத்த - அன்னத்தினாற் சொல்லப்பட்ட, குயிலுக்கு - குயில்போன்றவளாகிய தமயந்தியின் பொருட்டு, அலசுவான் - வருந்துகின்ற நளன், மெல் மயில் - மிருதுத் தன்மை வாய்ந்த மயிலானது, தன் தோகை விரித்து ஆட - தனது கலாபத்தைப் பரப்பி ஆடாநிற்க, அதனை முன்கண்டு - அவ்வாறு விரித்தாடும் மயிலினைத் தனக்கு எதிரில் பார்த்து, ஆற்றாது - பொறுக்காது, உள்ளம் கலங்கினான் - மனங் கலங்கி நின்றான், காமநோய் கொண்டார்க்கு - காமவியாதி உள்ளவர்களுக்கு, குணம் — வன்மை, இஃது அன்றே - இப்படிக் கலங்குதலல்லவா எ - று.

கண்டார்க்குச் சந்தோஷத்தை விளைக்கும் மயிலின் நர்த்தனம், நளன் காமநோயுற்று இருந்தானாதலின் அவனுக்கு வருத்தத்தை உண்டாக்கியது. குயில் - இனியமொழிக்கு உவமை. அலசுதல் - மனம் ஒருவழி நில்லாது கலங்குதல். அலசுவான் - வினையாலணையும் பெயர்.

## 43. வாரணியுங் கொங்கை ...

இ - ள் : நெஞ்சந் துடியா : (நளமகாராசன்) மனந் துடித்து, நெடிது உயிரா - பெருமூச்செறிந்து; சோர்ந்து - தளர்ந்து, கொடியார் - பூங்கொடியாரே, வார் அணியுங் கொங்கை - கச்சையணிந்திருக்கின்ற தனங்களையுடைய, மடவாள் - தமயந்தியினது, நுடங்கு இடைக்கு - அசைகின்ற இடைக்கு, பேர் உவமையாக - பெருமை தங்கிய உவமப் பொருளாகும்படி, பிறந்து உடையீர் - பிறந்து அப்பேற்றைப் பெற்றிருக்கிறவர்களே, வாரீர் - வாருங்கள், என - என்று, செம் கை கூப்பினான் - சிவந்த கைகளைக் குவித்து அவற்றை அழைத்தான் எ - று.

நளன் துடியா, உயிரா, சோர்ந்து, கொடியார் உடையீர் வாரீர், எனக் கூப்பினான் எனக்கூட்டுக. அசைந்து விளங்கும் பூங்கொடிகள் தனது காதலியின் இடைபோலத் தோன்றலால், மனமகிழ்ந்து காம மயக்கத்தால் அவற்றை வணங்கினான் என்பதாம். வேட்கை மிகுதி பற்றிக் கொடியாரென உயர்திணைப்படுத்திக் கூறினான். மடவாள் - மடமையென்னும் பண்படியாகப் பிறந்த பெயர். நுடங்கு இடை - வினைத்தொகை. வடிவும் தன்மையும் பற்றி கொடி இடைக்கு உவமை. ஒரு பொருளை அடைய விருப்பம் மிக்கவர் மனக் கலக்க மடைதலும் பெருமூச்சு விடுதலும் இயல்பாதலின் 'நெஞ்சந் துடியா - நெடிதுயிரா' என்றார். நெஞ்சம் இடவாகுபெயர்.

## 44. கொங்கையிள ...

இ - ள் : மங்கை - தமயந்தியினது, கொங்கை இளநீரால் - கொங்கைகளாகிய இளநீராலும், குளிர்ந்த இளம் சொல் கரும்பால் - குளிர்ச்சிபொருந்திய மெல்லிய சொற்களாகிய கருப்பஞ்சாற்றினாலும், பொங்கு - (அழகு) மிகுகின்ற, சுழி என்னும் - உந்திச்சுழியென்று சொல்லப்படும், பூந்தடத்தில் - தாமரைத்தடாகத்திலும், நறும் - நல்ல, கொய்தாமம் - (அப்பொழுது) பறித்த மாலைகளின், வாசக் குழல் நிழல் கீழ் - வாசனைபொருந்திய கூந்தலின் நிழலிலும், வெய்து ஆம் - வெப்பமான, அ காம விடாய் - அந்தக் காம வெப்பத்தை, ஆறேனோ - ஆற்றிக் கொள்ளப் பெறேனோ எ - று.

இளநீர், கருப்பஞ்சாறு, நீர்த்தடாகம், சோலை, நிழல் என்பவற்றை யடைந்தோர், தமது வெப்பத்தைத் தணித்துக் கொள்வதுபோல, நளனும் தமயந்தியினது இளநீர் போன்ற கொங்கைகளையும், கருப்பஞ்சாறு போன்ற சொல்லையும் தடாகம்போன்ற உந்தியையும், சோலைபோன்ற கூந்தல் நிழலையும் அடைந்து அநுபவித்து எனது, காமவெப்பத்தை நீக்கிக்கொள்ள மாட்டேனோவெனத் தன்னுட் கூறினான். இளமையும் திரண்ட வடிவும் பற்றி கொங்கை இளநீரென்றும் இனிய தன்மை பற்றிச் சொல் கரும்பென்றும் குழிந்து ஆழ்ந்திருக்குந் தன்மை பற்றிச் சுழி பூந்தடமென்றும், உருவகமாக்கிக் கூறப்பட்டன. நிழல் என்றதால் சோலை யென்பது பெறப்படுதலின் குழலைச் சோலையென உருவகமாக்காது கூறினார். கரும்பு - ஆகுபெயர். சுழி - தொழிலாகுபெயர். இது உருவக அணி.



## 45. மன்னன் விடுத்த ...

இ - ள் : மன்னன் விடுத்த - நளமகாராசன் அனுப்பிய, வடிவில் - அழகினால், திகழ்கின்ற - விளங்குகின்ற, அன்னம்போய் - அன்னப்பறவை சென்று, கன்னி அருகணைய - தமயந்தியின் பக்கத்திற்சேர, நல் நுதலும் - நல்ல நெற்றியையுடைய தமயந்தியும், தன் ஆடல் விட்டு - தனது விளையாட்டை விட்டு, தனி இடம் சேர்ந்து - ஒருவருமில்லாத தனித்த இடத்தை அடைந்து, ஆங்கு - அவ்விடத்தில், அதனை - அவ்வன்னப் பறவையை (நோக்கி), ஈங்கு நாடல் - இவ்விடத்தே நீ விரும்பி வந்த பொருள், என் சொல் என்றாள் - என்னவென்று கேட்டாள் எ - று.

தோழியருடன் விளையாடிக் கொண்டிருந்த தமயந்தி தன்னிடத்து வந்த அன்னத்தின் எண்ணத்தைப் பலருமிருக்கு மிடத்து வினவியறிதல் தகாதென்று தனித்த இடஞ்சென்று வினவினள் என்பதாம். நன்னுதல் - அன்மொழித்தொகை. ஆடல் - தொழிற்பெயர். அங்கு, இங்கு - ஆங்கு, ஈங்கு என முதல் நீண்டன. என் - வினாவினைக் குறிப்பு. நாடல் - தொழிலாகுபெயர்.

## 46. செம்மனத்தான் ...

இ - ள் : செம்மனத்தான் - செம்மையான மனமுடையவனும், தண்ணளியான் - குளிர்ந்த கிருபையுடையவனும், செம்கோலான் -

செங்கோலுடையவனும், மங்கையர்கள் தம்மனத்தை - இளம் பெண்களுடைய மனத்தை, வாங்கும் - தன்வசப்படுத்தும், தடம் தோளான் - விசாலமான தோள்களையுடையவனும், மேல் நிலத்தும் - மேலுலகத்திலுள்ளவர்களிலும், நால் நிலத்தும் - பூமியிலுள்ளவர்களிலும், மிக்கான் - சிறந்தவனுமாகிய, மெய்ம்மை நளன் என்பான் - சத்தியத்தையுடைய நளமகாராசன் என்று சொல்லப்படுபவன், உனக்கு— வேந்தன் - தலைவனாய், உளன் - இருக்கிறான் எ - று.

தடந்தோள் - உரிச்சொற்றொடர். நிலம் - இடவாகுபெயர். நானிலம் - பூமி. அன்மொழித்தொகை. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந்தனுள் பாலை தனக்கோர் இடமின்றி, ஏனைய நான்கு நிலங்களினிடையே தோன்றுதலினாற் பாலையையொழித்து, நான்கு நிலமெனப்பட்டது.

## 47. அறங்கிடந்த ...

இ - ள் : அறங்கிடந்த நெஞ்சும் - தருமம் நிறைந்த மனமும், அருள் ஒழுகு கண்ணும் - கருணை பெருகி வடிகின்ற கண்ணும், மறம் கிடந்த - வீரம் பொருந்திய, திண்தோள் வலியும் - உறுதியான புயவலியும், திறம் கிடந்த - எல்லா வல்லபமும் மிக்க, செம் கண் மால் அல்லனேல் - சிவந்த கண்களையுடைய விஷ்ணுவேயல்லாமல், அங்கண் மா ஞாலத்து - அழகிய இடமகன்ற பெரிய பூமியில், தேர் வேந்தர் - தேரையுடைய அரசர்கள், அவற்கு - அந்த நளமகாராசனுக்கு, ஒப்பரோ - ஒப்பாவார்களோ? எ - று.

தருமகுணம், தண்ணளி, புயவலி, முதலிய சிறந்த குணங்களிற் காத்தற் கடவுளான திருமாலை அந்த நளனுக்கு ஒப்பாகக் கூறலாமேயன்றி, உலகத்துள்ள எவ்வரசரையும், ஒப்புமை கூறத் தகாதென்பதாம். மால் - பெருமைக் குணமுடையவன். எல் - என்னில் என்பதன்மரூஉ. ஓகாரம் - எதிர்மறை.



## 48. புள்ளின் மொழியினொடு ...

இ - ள் : வண்டின் பொதி - வண்டுக்கூட்டம், இருந்த - தங்கியிருந்த, மெல் ஓதி - மென்மையாகிய கூந்தலையுடைய, பொன் - இலக்குமி போன்ற தமயந்தி, புள்ளின் மொழியினொடு - அன்னத்தின் சொல்லுடனே, பூவாளி - (மன்மதனது) மலரம்பு, தன்னுடைய உள்ளம் கவர - தனது மனத்தைக் கொள்ளை கொள்ளுதலால், ஒலி இழந்த - பிரகாசமற்ற, வெள்ளை மதி - வெண்மையான சந்திரன், இருந்தது ஆம் என்ன - இருந்ததைப்போல, வாய்ந்து - (முகம் விளர்த்தலைப்) பெற்று, இருந்தாள்—, எ - று.

தமயந்தி நளனது அழகின் திறத்தை விரித்துக்கூறிய அன்னப் பறவையின் சொல்லைக்கேட்டு நளன்மேல் ஆசைகொண்டு தன்வசமிழந்து செயலற்றிருந்தன ளென்பதாம். பூவாளி - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. வெள்ளை - பண்புப்பெயர். ஓதிப்பொன் - இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. பொன்- உவமவாகுபெயர்.

## 49. மன்னன் மனத்தெழுந்த ...

இ - ள் : மன்னன் மனத்து - நளராசனது மனத்தில், எழுந்த - (தமயந்தி பொருட்டு) உண்டாகிய, மையல் நோய் அத்தனையும் - காம நோய் முழுவதையும், அன்னம் உரைக்க - அன்னமானது எடுத்துக் கூற, அகம் உருகி - (அதனால்) மனங் கரைந்து, முன்னம் - (அன்னத்தால் நளனை அறியும்) முன்னதாகவே, முயங்கினாள் போல் - அவனைத் தழுவிக் கொண்டவள்போல், தன் முலைமுகத்தை - தனது தனங்களை, பாரா - பார்த்து, மயங்கினாள் - அறிவழிந்திருந்தாள், மற்று என் செய்வாள் - வேறு என்ன செய்வாள் எ - று.

ஆசைமேலீட்டால், தழுவாத நளனைத் தழுவியதாக மயங்கித் தனது தனங்களைப் பார்த்துத் தழுவியதாலாகும் நகக்குறி முதலியவை காணப்பெறாமையால், இதற்குக் காரணம் யாதென மயங்கினாள் என்பதாம்.

## 50. வாவியுறையு ...

இ - ள் : பார்வேந்தன் பாவை - பூமியை ஆளுகின்ற அரசனான வீமனது மகளான தமயந்தி, பதைத்து - (ஆசை மிகுதியால்) மனம் பதறி, (பறவையை நோக்கி) மட அனமே - இளமையான அன்னமே, காவின் இடைசென்று - நளன் இருக்கும் சோலையிற்போய், தேர் வேந்தற்கு - தேரையுடைய அரசனாகிய அந்நளமகாராசனுக்கு, என் நிலைமை - எனது அன்ப நிலைமையை, உரைத்தி - நீ சொல்வாய், என்னுடைய ஆவி உவந்து அளித்தாய் ஆதி - (அப்படி உரைத்து அவனை எனக்கு மணமகனுக்குவாயாயின்) எனது உயிரை மகிழ்ந்து கொடுத்தவனுவாய், என்று உரைத்தாள் - என்று சொன்னாள் எ - று.

'எனது ஆசை மிகுதியை நளனுக்கு எடுத்துக் கூறி அவனை எனக்கு மணஞ்செய்து வைத்திடாயாயின், எனதுஉயிர் வருந்தி அழியு' மெனத் தனது ஆசை மிகுதியை வெளியிட்டாள். இராச காரியங்களில் ஈடுபட்டிருக்கும் வேளையில் உரைப்பின் அது செவி நுழையாமையுடன் மனதிலும் பதியாதாதலின் 'காவினிடைத் தேர்வேந்தற்கு' உரைத்தி என்றாள்.

## 51. மன்னன் புயநின் ...

இ - ள் : அன்னம் - அன்னமானது, மன்னன் புயம் - நளமகாராசனுடைய தோள்கள், நின்வனம் முலைக்கு - உன்னுடைய தொய்யிற் கோலம் அமைந்த தனங்களுக்கு, கச்சு ஆகும் என்ன - இரவிக்கையாகுமென்று சொல்லும்படி, முயங்குவிப்பேன் - அணையும்படி செய்வேன், என்று - என்றுசொல்லி, பின்னும் - மேலும், பொருந்த - (அவள் மனதிற்) பதியும்படி, அன்பால் ஓதி - அன்பினுற் சில வார்த்தைகளைச் சொல்லி, (பின்பு) மலர் பூ கணைகள் - (மன்மதனது) பூவாகிய அழகிய அம்புகள், பாய - பாயும்படி, இருந்தவன்பால் - (வருந்தி) இருந்தவனாகிய நளமகாராசனிடத்தில், எழுந்து போனது - (விடைபெற்றுக் கொண்டு) பறந்து போயிற்று.



புயம் முலைக்குக் கச்சாதல் - வேறுபடாது இரண்டும் பொருந்தி இருத்தல். தொய்யிலாவது - மகளிர் மார்பிலும் தோளிலும் மன்மதனுடைய வில் முதலியவற்றைச் சந்தனத்தால் எழுதப்பெறும் ஒரு வகைக் கோலம். முயங்குவிப்பேன் - பிறவினைத் தன்மை ஒருமை வினைமுற்று.

## 52. கொற்றவன்றன் ...

இ - ள் : கோமகள் தன் தோழியர்கள் - இராச குமாரத்தியாகிய தமயந்தியினது தோழியர்கள், உற்றது அறியா - தமயந்திக்கு ஏற்பட்ட (வருத்த மிகுதியை) தெரிந்து, உளம் நடுங்கி - மனம் பதறி, கொற்றவன்தன் தேவிக்கு - வெற்றியையுடைய வீமராசனது மனைவிக்கு, பொன் தொடிக்கு - பொன்னுலாகிய வளையல்களையணிந்த தமயந்திக்கு, வேறுபாடு - (முன்னிலைமைக்கு) மாறுதல், உண்டு என்றார் - உண்டாய் இருக்கிறதெனச் சொன்னார்கள், அதனை - அச் செய்தியை, பெற்ற கொடி - தமயந்தியைப்பெற்ற தாயானவள், வேந்தனுக்கு அரசனுக்கு; கூறினாள் - சொன்னாள் எ - று.

தமயந்தியின் இன்ப துன்பங்களைத் தமதாகக்கொள்ளும் உயிர்த் தோழியர்களாய் அவளைக் காப்பவர்களாதலால் தமயந்தியின் வேறுபாட்டுக்கு, உள்ளம் நடுங்கி உடனே நற்றாய்க்குத் தெரிவித்தார்கள்; அதனை அவள் வீமராசனுக்குத் தெரிவித்தாள் என்பதாம். கணவன் மேல் விருப்பங் கொண்டாளென்பது இடக்கரடக்கலாக அதனை மறைத்து வேறுபாடுண்டென்றார். வேறுபாடு - முதனிலை நீண்ட தொழிற்பெயர்.

## 53. கருங்குழலார் ...

இ - ள் : கருங்குழலார் - கருமையாகிய கூந்தலையுடைய பெண்களது, செங்கையினுல் - சிவந்த அகங்கையால் (வீசும்), வெண்கவரிப் பைங்கால் - வெண்சாமரையினது குளிர்ந்த காற்று, மருங்கு உலவ - இருபக்கங்களிலும் வீசவும், வார் முரசம் - வாரணிந்த முரசுவாத்தியங்கள், ஆர்ப்ப - ஒலிக்கவும், நெருங்கு புரிவளை - நெருங்கிய முறுக்கு

களையுடைய சங்குகள், நின்று ஏங்க - நிலைபெற்று ஒலிக்கவும், போய்—, பெற்ற - தான்பெற்ற, வரிவளைக்கை நல்லாள் மனை, கீற்றுப் பொருந்திய வளையல்களையணிந்த கைகளையுடைய நற்குண நற்செய்கைகளையுடைய தமயந்தியினது மாளிகையில், புக்கான் - புகுந்தான் எ - று.

உலவ, ஆர்ப்ப, ஏங்க மனைபுக்கான் எனக் கூட்டுக.

## 54. கோதை சுமந்த ...

இ - ள் : மீது எல்லாம் - மேலெல்லாம், களிவண்டு - மதுவுண்டு களிக்கின்ற வண்டுகள், காந்தாரம்பாடி - காந்தாரம் என்ற பண்ணைப் பாடி, நின்று அரற்றும் - நீங்காமல் நின்று ஒலிக்கின்ற, பூ தார் அம் மெல் ஓதிப் பொன் - பூமாலையை அணிந்த அழகிய மென்மையாகிய கூந்தலையுடைய இலக்குமியை யொத்த தமயந்தி, கோதை சுமந்த கொடிபோல் - மலர்மாலையைச் சுமந்துள்ள பூங்கொடியைப் போல, இடை நுடங்க - இடை தளரும்படி ( வந்து ), தாதை திரு அடி மேல் - தந்தையினுடைய அழகிய பாதங்களில், தான் வீழ்ந்தாள்- தான் வீழ்ந்து வணங்கினாள் எ - று.

காந்தாரம் ஓர்வகைப் பண். இது குறிஞ்சி யாழ்த் திறம் எட்டில் ஒன்று. பொன் - உவம ஆகுபெயர்.

## 55. பேரழகு சோர்கின்ற ...

இ - ள் : பேர் அழகு - மிகுந்த அழகு, சோர்கின்றது என்ன - வழிகின்றது என்று உவமை சொல்லும்படி, பிறை நுதல் மேல் - பிறைச்சந்திரன் போன்ற தனது நெற்றியில், நீர் அரும்ப - வேட்கை மிகுதியாலாகிய வேர்வை நீர் துளிக்க, நின்றாள் - நின்றவளான, தன் பேதையை - தனது குமாரத்தியின் நிலைமையினை, பாரா - பார்த்து, குலம் வேந்தன் - உயர்ந்த குலத்திற் பிறந்த வீமராசன், சேர வேந்தர் தம்மை மலர் வேய்ந்து கொள்ளும் மணம் - மேன்மை பொருந்திய அரசர்களில் ஒருவனை மலர்மாலை அணிந்து மணஞ்செய்து கொள்ளத்



தக்க சுயம்வரத்தை, சிந்தித்தான் - தன்மகளுக்கு நாட்ட வேண்டுமென நினைத்தான் எ - று.

வேட்கை மிகுதியால் நெற்றியில் இருந்து ஒழுகும் வெயர்வையை அழகு ஒழுகுவதாகக் குறித்தார். பிறை நுதல் - உவமத்தொகை. பேதை நின்றாளை என்றவிடத்து ஐ உருபு பிரித்துக் கூட்டப்பட்டது. நின்றாள் - வினையாலணையும் பெயர். மலர் ஆகுபெயர். குலம் - வடசொல்.

சுன்னுகம்
திருமகள் அழுத்தகம்

279/46—3000